# Salve Regina

SOCIETY OF ST. PIUS X

நவம்பர்-டிசம்பர் 2008

மலர்: 3 இதழ்: 12

(தனிச்சுற்றுக்கு மட்டும்)




**“வார்த்தையானவர் மாம்சமாகி, இஷ்டப்பிரசாதமும் சத்தியமும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசமாயிருந்தார்”** (அரு. 1:14)

சேசுக்கிறிஸ்துநாதரில் அன்பார்ந்தவர்களே,

நமது **'Salve Regina'**பத்திரிகை எண்ணற்ற வேத சாட்சிகள் தங்கள் இன்னுயிர் ஈந்து பாதுகாத்த, நமது முன்னோர்களின் விசுவாசத்தை போதித்துக் கொண்டு வருகிறது என்பதை அறிவீர்கள். அது இன்று பெருவாரியான நல்ல கத்தோலிக்கர்களைகூட தங்கள் அறியாமையைப் பயன்படுத்தி உண்மையான கத்தோலிக்க விசுவாசத்தை விட்டு அகற்றி வரும் நவீனமெனும் சுனாமி அலையை எதிர்த்து சத்தியத்தை எடுத்துரைத்து வருவதையும் நீங்கள் உணருவீர்கள். நமது சத்திய, கத்தோலிக்க விசுவாசத்தை ஆன்மாக்களுக்கு **'Salve Regina'** பத்திரிகை ஊட்டி வருவதை தெரிந்திருப்பீர்கள். இந்த கைங்கரியத்தை ஒரு எளிய வழியில், சிறிய வழியில் - இயல்பான வழியில் செய்து வருகிறோம். நாம் நமது திறமைகளிலோ அல்லது பெரிய டாம்பீகமான ஆரவாரங்களிலோ நம்பிக்கை வைக்க வில்லை. ஏனெனில் "இருளின் மக்கள், ஒளியின் மக்களைக் காட்டிலும் விவேகிகளாக இருக்கிறீர்கள்" (          ) அல்லவா?

அன்பார்ந்த வாசகர்களே, நாம் இவ்வாறு நமது அலுவலை ஆற்றிவரும் போது, நாம் புதிய சத்தியங்களை யோ, நூதனமானவைகளையோ அல்லது இந்த இயந்திர மயமான உலகம் நினைப்பதற்கேற்ற எதனையும் நாங்கள் கற்பிக்கவில்லை. காலங்காலமாக இந்த 20 நூற்றாண்டு களாக நமது தாயாம் திருச்சபை போதித்த பாரம்பரிய போதனைகளையே உங்களுக்குத் தருகிறோம். இதனையே எமது வாசகர்களாகிய உங்களிடமிருந்து வரும் கடிதங்கள் உறுதி செய்கின்றன. மிகச்சிறியதாக இருந்தாலும் நமது இந்த வெற்றியை முதலில் நமதாண்டவர் சேசுக் கிறீஸ்துவுக்கும், அவரது மகா பரிசுத்த கன்னிமரியாயிக்கும், நமது பத்திரிகை யின் அனைத்து பாதுகாவலர்களான அர்ச்சியசிஷ்டவர் களுக்கும் உரித்தாக்கிக் கொள்கிறோம்.

நமக்கு பாராட்டுக்கள் வந்தாலும், பல புகார்கள் வந்துகொண்டுதான் இருக்கிறது. பத்திரிகை மாத கடைசியிலேதான் வெளியிடப்படுகிறது அல்லது மாத இறுதிக்குப் பிறகே தங்களை வந்தடைகிறது என்ற அந்த அங்கலாய்ப்புக்கள் எம்மையும் உணரச் செய்கின்றன. இதனை சரிசெய்ய முயற்சிகள் எடுக்கிறோம். ஆனால் இதுவரை இயலவில்லை என்பதே உண்மை! இதன் கடைசி உபாயமாக இந்த இதழை இருமாத வெளியீடாக குறிப்பிட்ட நேரத்திற்குள் அனுப்பலாமென்று முயன்றோம். அதுவும் இயலவில்லை. வாசகர்களுக்கு மாதத் துவக்கத்தில் ஏன், முந்தின மாத இறுதியிலேயே பத்திரிகையை வழங்க வேண்டும் என்று வெகுவாக ஆசிக்கின்றோம். அதற்காக முயற்சிகள் செய்கின்றோம். எங்களுக்காக ஜெபியுங்கள். வரும் புத்தாண்டிலாவது எமது இந்த ஆவலை நிறைவேற்ற நமது நல்ல தாய் கன்னிமாமரி உதவுவார்களாக!

புதிய திருவழிபாட்டின் புதிய ஆண்டு இந்த முதல ஆகமன கால ஞாயிறன்றிலிருந்து துவங்குகிறது. இதனைச் சிறப்பிக்கும் வகையில் அர்ச். குழந்தை சேசுவின் தெரேசம் மாளின் ஞான வாழ்வைப் பற்றிய புதிய கட்டுரைத் தொடரை அறிமுகம் செய்யலாமென்று விரும்புகிறோம். இந்த தொடர் **சங். மார்ட்டின் சுவாமி** என்பவர் எழுதிய அர்ச். தெரேசம்மாளின் வாழ்க்கை மற்றும் அவளது எழுத் துக்களின்(சிறுசிறு குறிப்புகள், கடிதங்கள் போன்றவை) அடிப்படையில் அமைந்த **"ஞான குழந்தைத்துவத்தின் சிறிய வழி"** என்ற நூலின் தமிழாக்கமாக இருக்கும். சிறிய புஷ்பம் அர்ச். குழந்தை சேசுவின் தெரேசம்மாளின் சிறிய வழியில் பயணித்த ஆயிரக்கணக்கான ஆன்மாக்கள் தங்களையே அர்ச்சித்துக்கொண்டுள்ளார்கள். அவர்களில் ஒருவர்தான் நமது இந்தியாவின் சிறிய புஷ்பமான அர்ச். அல்போன்ஸம்மாள் என்று சென்ற இதழில் குறிப்பிட் டிருந்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்த நூலைப் பற்றியும் அதன் ஆசிரியர் சங். மார்டின் சுவாமியையும் பற்றிய ஒரு அழகிய அறிமுகத் தொகுப்பு நான் 3 ஆண்டு காலம் பயின்ற ஆஸ்திரேலியாவின் திருச்சிலுவை குருமடத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பாக வெளிவந்த "கத்தோலிக்க குடும்பம்" (Catholic Family) என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டது. அதை அப்படியே வாசகர்களுக்கு தருவது நல்ல பயன் தரும் என நம்புகிறோம். திருச்சிலுவை குருமடம் வெளியிட்ட கத். குடும்பம் என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிமுகத் தொகுப்பு கட்டுரையிலிருந்து சிலவற்றை கீழேத் தருகிறோம்.

".....இந்த நூலை எழுதிய குருவானவர் அர்ச். தெரேசம்மாளை நன்கு அறிந்தவர். இந்த நூலை வாசித்த அர்ச். தெரேசம்மாளின் சகோதரிகள் முதலில் புனிதையின் ஞான கொள்கை (Doctrine) நன்கு விளக்கப்பட்டுள்ளது என்று பாராட்டியுள்ளனர். அவர்களுடைய வேண்டு கோளின்படியேதான் சங். மார்டின் சுவாமி இந்த நூலை 1923-ல் வெளியிட்டார். "சிறிய வழி" என்ற அந்த நூல் மிகப் பெரிய அளவில் வெற்றி பெற்றது. உலக முழுவதிலும் 12 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதனை படித்ததால் பெரிய ஞான நன்மைகளை பெற்றுக் கொண்டதாக அநேக வாசகர்கள் எழுதியுள்ளார்கள்.....

"சங். மார்டின் தமது நூலினை புனிதையின் சுயசரித்தரமான "ஓர் ஆன்மாவின் வரலாறு" என்ற புத்த கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதியுள்ளார். அவளது சுயசரித்திரம் அதனைப் படித்தவர்களிடம் ஞான வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ...அதனை வாசித்த பிலிப்பைன்ஸ் நாட்டு ஜனாதிபதி திரு. க்யூயிஸோன் (Quezon) அவர்கள் 14 தடவைகள் இந்த நூலை விரும்பி படித்ததால் தாம் இழந்துபோன கத். விசுவாசத்தை மீண்டும் பெற்று திருச்சபையோடு மீண்டும் ஒப்புரவானார்..... ஞான வாழ்வின் அசமந்தத்தை வெற்றிகொள்ளவும், உண்மையான தாழ்ச்சியை நமக்குப் போதிக்கவும் சர்வேசுரன் இந்த 24 வயதே நிரம்பிய கார்மெல் கன்னிகையைத் தேர்ந்தெடுத் துள்ளார். **ஆம்! லீஸியே நகர் கன்னியாஸ்திரி ஆன்மாக் களுக்கு உதவ ரோஜாமலர் மாரியை பொழியவும் செய்தாள்.** அவளது மன்றாட்டால் ஆயிரக்கணக்கான புதுமைகள், சலுகைகள் நிகழ்ந்து அவளது ஞான போதகத்திற்கு சர்வேசுரனின் அங்கீகாரத்தை உணர்த்தின. சர்வேசுரன் காரணமில்லாமல் எந்த ஒரு அற்புதத்தையும் நிகழ்த்துவதில்லை. அர்ச். தெரேசம்மாளின் மன்றாட்டின் புதுமைகள், அவளது அசாதாரணமான பண்புகளில், புனிதத்துவத்தில் உள்ள அதிகாரப்பூர்வமான நம்பகத் தன்மையை வெளிப்படுத்தும் தேவ முத்திரைகளாகத் திகழ்கின்றன.

".....அர்ச். தெரேசம்மாளின் அலுவல்தான் என்ன? இதற்கு, தாம் மரணமடைவதற்கு சற்று நேரத்திற்கு முன்பாக "எனது அலுவல் மிக விரைவில் துவங்க உள்ளது. எனது அலுவல் நல்ல கடவுளை நான் நேசிப்பது போல மற்றவர் களையும் நேசிக்கும்படி செய்வது..... எனது சிறிய வழியை ஆன்மாக்களுக்கு கொடுப்பதுமே! .....நான் எனது மோட் சத்தை பூமிக்கு நன்மை செய்வதிலேயே செலவிடுவேன்....."

என்று பதில் கூறினாள். அவள் எந்த வழியை ஆன்மாக் களுக்குக் கற்றுத்தர விரும்புகிறாள்? என்று கேட்டதற்கு உடனே, "அது ஞான குழந்தைத்துவ வழி. அது நம்பிக்கை யின் வழி, முழுவதும் சர்வேசுரனை சரணடைந்துவிடச் செய்யும் வழி. எனக்கு வெற்றியை நிறைவாகத் தந்த அதனை ஆன்மாக்கள் அறியச் செய்ய விரும்புகிறேன்" என்று பதிலளித்தாள்.

".....இந்த அர்ச்சியசிஷ்டவளின் சிறிய வழியாகிய ஞான குழந்தைத்துவத்தையே" சங். மார்டின் அனைவரும் அறிய செய்ய விரும்புகிறார். இந்த நூல் அர்ச். தெரேசம் மாளின் கிரமமான ஞான வழியை - கொள்கையின் வழியை கொடுப்பதின் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆகையினால் தான் இந்த நூல் அர்ச்சியசிஷ்டவளைப் புரிந்து கொள்வதில் உதவிகரமாக இருக்கும். இந்த நூலில் உள்ள கருத்துக்களை சிறிது சிறிதாக அவற்றின் மீது ஊன்றி தியானித்து வாசிக்க வேண்டும். அதனால்தான் அதிலுள்ள உன்னதமான உண்மைகள் நமது மனதை நிரப்புவதுமல்லாமல், அவற்றை நடைமுறைப்படுத்தவும் பெரிதும் உதவிகரமாக இருக்கும். அர்ச். குழந்தை சேசு தெரேசம்மாள் கூறுவது போல அவளது வழி **நிச்சயமான வழி**, அதாவது சர்வேசுரனோடு ஐக்கிய மாவதற்கு **பாதுகாப்பான சுருக்கமான வழியாக** இருக்கிறது என்பதை இதை வாசிக்கிறவர்கள் நன்கு அறிந்து கொள்வார்கள்.

".....ஞான குழந்தைத்துவத்தில் கத்தோலிக்க உலகின் அனைத்து விசுவாசிகளுக்கும் புனிதத்தனத்தின் இரகசியம் பொதியப்பட்டுள்ளது" என்று பாப்பரசர் 15-ம் ஆசீர்வா தப்பர் 1921 ஆகஸ்ட் 14-ல் அர்ச். தெரேசம்மாளின் வீர வைராக்கிய புண்ணியங்களை அங்கீகரித்து பேசும் போது கூறினார். மேலும் அவர், "ஒவ்வொரு நாட்டிலுள்ள விசுவாசிகள் அனைவரும், அவர்கள் எந்த வயதுக்காரர் களோ, எந்த பாலினத்தைச் சார்ந்தவர்களோ, எந்த வாழ்க்கை நிலையைக் கொண்டவர்களாக இருந்தாலும் சகோதரி குழந்தை சேசுவின் தெரேசம்மாளை வீர வைராக்கிய புண்ணியத்தின் உச்சத்துக்கு வழிநடத்திய சிறிய வழியை முழு இருதயத்தோடு ஏற்றுக்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சகோதரி குழந்தைசேசுவின் தெரேசாளின் அர்ச்சியசிஷ்டதனத்தின் இரகசியம் நமது எல்லா பிள்ளைகளுக்கும் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதே நமது விருப்பம்" என்று கூறினார். அவருக்குப் பின் வந்த பாப்பரசர் 11-ம் பத்திநாதரோ 1923 ஏப்ரல் 29-ல் "அனைத்து விசுவாசிகளும் குழந்தைகளாவது பற்றிய பயிற்சியில் அவளை கண்டுபாவித்து, அறியவேண்டும் என்பதே நமது ஆழ்ந்த விருப்பம். ஏனெனில் குழந்தைகளாக ஆகாவிடில் மோட்ச இராச்சியத்தை அடைய மாட்டீர்கள் என்று நமது தெய்வீக போதகர் கூறுகிறார்" என்று கூறினார்.....

அதோடுகூட, இந்த புதிய திருவழிபாட்டின் ஆண்டு துவக்கத்தில் நமது வாசகர்களின் இருதயத்தில் கத்தோலிக்க உணர்வை ஊட்ட பெரு முயற்சி செய்வோம். அர்ச். இஞ்ஞாசியார் கூறுவதுபோல, "திருச்சபையின் மனநிலை யோடு - Sentire cum Ecclessia" சிந்திக்கத் தூண்டுவோம். நாம் வாழும் கெட்டுப்போன உலகம் மக்களின் மனங்களில் தனது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனை மிகவும் உறுதியோடு எதிர்த்து நிற்க வேண்டும். இந்த உலகமயமான போக்கிற்கு கத்தோலிக்கர்கள்கூட நமது பரிசுத்தமான உணர்வுகளை இழந்து விட்டனர். குறிப்பாக சமீபத்தில் நாகர்கோவில் அருகே ஒரு புகழ்பெற்ற ஆலயத்தை நான் கடந்து செல்லும் போது அங்கே வைக்கப்பட்டிருந்த விளம்பரத்தைக் கண்டு திடுக்கிட்டு போனேன். அதில் நமதாண்டவர் மற்றும் மாதாவின் படங்களோடு சினிமா நடிகர்கள், அரசியல் தலைவர்களின் படங்களும் சேர்த்து அச்சிடப்பட்டிருந்தன. என்ன ஒரு அவசங்கை! அருவருப்பான செயல்!! "கிறீஸ்துநாதருக்கும் பெலியாலுக்கும் ஒப்பந்தமென்ன? நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் கூட்டேது" (2 கொரி. 6:15) என்ற அர்ச். சின்னப்பரின் வரிகள் என் நினைவிற்கு வந்தன. கிறீஸ்துவின் பரிசுத்த போதனைகளுக்கும் அதற்கு சிறிதும் ஒவ்வாத சினிமா நடிகர்களின் செயல்பாடுகளுக்கும் என்ன சம்பந்தம் இருக்கவேண்டும்?

40 வருடங்களுக்கு முன்பாக இந்த செயல்களை நினைத்துப் பார்த்திருக்க முடியுமா? இன்று கத்தோலிக் கர்கள் மத்தியிலும்கூட இந்த உலக மாயையான ஒழுங்கின உணர்வுகள் மேலோங்கி உள்ளது. ஆகையால் இதற்கு விரோதமாக கத். பாரம்பரிய விசுவாசத்தையும் அதனுடைய நடைமுறை ஒழுங்குகளையும் நமது சகோதரர்களுக்கு நினைவூட்டுவதும், போதிப்பதும் நமது கடமையாகிறது. ஏன்? கத். திருச்சபையை நேசிக்கும் மக்கள் அனைவருக்கும் இது சுமத்தப்பட்ட கடமையாகத் திகழ்கிறது.

நேயர்களே அனைவருக்கும் கிறீஸ்து பிறப்பு திருநாள் வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கிறேன். ஆசீர்.

**PAX VOBIS**

**சங். வளன் D.ராஜகுமார் சுவாமி**
**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை**
**பாளையங்கோட்டை**

**இன்று நம்மேல் பேரொளி உதயமாகும்; ஏனெனில் ஆண்டவர் நமக்காகப் பிறந்திருக்கிறார்: அவர் அதிசயமானவர், தேவன், சமாதானப் பிரபு, வரப்போகிற உலகத்தின் பிதாவென்று அழைக்கப்படுபவர்; அவரது அரசாட்சிக்கு முடிவில்லை.**

**(பிரவேச கீதம் – இசை. 9:2–6. விடியற்காலை பூசை)**

# குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு திறந்த மடல்

**- அதிமேற்றிராணியார் மிக வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை -**

(கடந்த 42 ஆண்டுகளாக கத்தோலிக்கத் திருச்சபையில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகிறது. இதனால் சாதாரண விசுவாசிகள் செய்வதறியாமல் திகைத்துபோய் உள்ளனர். அவர்களுக்கு வழிகாட்டும் விடிவெள்ளியாக அதிமேற்றிராணியார் மிக. வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை திகழ்கிறார். அவர் எழுதிய "குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு ஓர் திறந்த மடல்" என்ற நூலின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இது நிச்சயமாக குழம்பிப் போயிருக்கும் கத். மக்களின் மனங்களில் எழும் சந்தேகங்களுக்குப் பதிலாக அமையும் என்பதில் ஐயமில்லை. – ஆசிரியர்)

## (8) புதிய வடிவத்தில் தேவதிரவிய அநுமானங்கள்! (தொடர்ச்சி)

## பச்சாத்தாபம்

*பிரான்ஸ் நாட்டின் கத்தோலிக்கர்களைப் போலவே உலகெங்குமுள்ள கத்தோலிக்க மக்களும் பெரிய குழப்பத்திலு; உள்ளனர். ஒரு பாவியோ அல்லது வேதத்தை மறுதலித்த ஒருவனோ, மேற்றிராணியாருடைய அறிவுரையை ஏற்று (கடந்த இதழில் குறிப்பிட்டதைப் போன்று - ஆசிரியர்) பொதுக்கூட்டு பாவப்பொறுத்தல் சடங்கிற்கும், அதன் பின்னர் திவ்விய நற்கருணை வாங்குவதற்கும் முற்படும்போது, தனது உண்மையான தகுதியின் மீது சந்தேகம் கொள்பவன் இவ்வளவு எளிதாகக் கொடுக்கப்படும் தேவ திரவிய அநுமானம் செல்லுமா என்று சந்தேகப்படத் துவங்குகிறான். இவ்வரவேற்பு சடங்கு முறையை மட்டும் பெற்றுவிட்டு மெய்யான தனிப்பாவசங்கீர்த்தனத்தை பிறகு சாதாரணமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்றிருப்பவர்கள் தங்கள் நிலையை ஒழுங்கு பண்ணாமல் போனால் என்ன ஆகும்? இப்படியாக "தகப்பன் வீட்டிற்கு" திரும்பி வர செய்வதற்கு நடக்கும் அரைகுறை முயற்சி அவர்களுடைய இறுதி மனந்திரும்புதலை இன்னமும் கடினமாக ஆக்கிவிடும்.*



*வேதசாஸ்திரத்தில் காண்பிக்கப்படும் அலட்சியப் போக்கு இதற்குதான் இட்டுச் செல்கிறது. "பொதுக்கூட்டுப் பாவப் பொறுத்தல்" சடங்கில் பங்கேற்றவர்களுக்கு தங்களுடைய பாவங்கள் மெய்யாகவே மன்னிக்கப்பட்டன என்பதற்கு என்ன உறுதியான அத்தாட்சி உள்ளது? பதிதர்களைப் போலவே இம்மனிதனும் சந்தேகத்தினால் ஏற்படும் உள் மன உளச்சலையும், வேதனையையும் அடைகிறான். இப்பொழுது கூட்டுப் பாவப்பொறுத்தலால் இவனுக்கு ஒரு பயனுமில்லை. உளவியல் ரீதியானாலும் அநுமானத்தின் செல்லுபடி வகையிலும் இது தீமையாக இருக்கிறது. எப்படியெனில், நிபந்தனையோடு பொதுக்கூட்டுப் பாவ பொறுத்தலை கொடுத்துவிட்டு பின்பு கனமான பாவங்களைக் கட்டிக்கொண்டவர்கள் மட்டும் தனிப்பாவசங்கீர்த்தனத்திற்கு செல்லவேண்டும் என்று சொல்வது அறிவுக்கு ஒவ்வாததாக இருக்கிறது. ஏனென்றால் அப்படி நடந்தால், இப்படி உடனே பாவசங்கீர்த்தனம் செய்ய செல்பவர்கள் தங்கள் ஆத்துமத்திலே கனமான பாவம் இருக்கிறது என்ற நிலையை மற்ற அனைவரும் அறிந்துகொள்ளும்படி ஆகிவிடும். இக்காரியம் பாவசங்கீர்த்தன இரகசியத்தை வெளிக்கொணர்வதற்கு இணையாக இருக்கும்!*

பொதுப் பாவப்பொறுத்தல் சடங்கிற்குப் பின்பு நற்கருணை உட்கொண்டவர்கள் பின்னர் மீண்டும் பாவசங்கீர்த்தன நீதி ஆசனத்தின் முன் தாங்கள் போக வேண்டிய தேவையைக் காணமாட்டார்கள். பொதுப் பாவமன்னிப்புச் சடங்கு, தனிப்பாவசங்கீர்த்தனத்திற்கு அனுசரனையாக இராமல் அதற்கு மாற்று வழியாக மாறிவிடும் நிலை தோன்றிவிடும். இவ்வாறு நாம் பச்சாதாபம் என்ற தேவதிரவிய அநுமானம் அழிந்து போவதற்குத்தான் வழியாகிறது.. எந்தவிதமான மேய்ப்பு பணி காரணங்களுக்கும் இதை நியாயப்படுத்த முடியாது.

ஒரு தேவதிரவிய அநுமானம் செல்லுபடியாவதற்கு, பொருள் (matter), வார்த்தை (form), கருத்து (intention), இவைகள் தேவைப்படுகின்றன. பாப்பானவரும் இதை மாற்ற முடியாது. **பொருள்** - சர்வேசுரனால் ஏற்படுத்தப்பட்டது. நாளை, பாப்பானவர்கூட இனி நாம் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு தண்ணீருக்குப் பதில் பாலை பயன்படுத்தலாம் என்று சொல்ல முடியாது. அதே போன்றுதான், **வார்த்தைகளும்** முக்கியமானவை; நாளை யாரும் "நான் உன்னை சர்வேசுரன் பெயரால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்" என்று மாற்ற முடியாது. ஏனென்றால் "நீங்கள் பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்துவினால் ஞானஸ்நானம் கொடுங்கள்" என்பது தேவ கட்டளையாய் இருக்கிறது.

(தொடரும்)

# தேவ ஆராதனை முறைமை

## உரோமைய பூசைப் புத்தகம்

### பூசைப் புத்தகத்தை உபயோகிக்கும் முறை

"பூசைப்புத்தகம்" இரு பெரிய பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவை "சாதாரண பாகம்", "விசேஷ பாகம்" எனப்படும். "சாதாரண பாகத்தில்" மாறாத ஜெபங்களும், திருப்பலி முறையும் அடங்கியுள்ளன; "விசேஷ பாகத்தில்" ஞாயிறு, கடன் திருநாட்கள், அர்ச்சியசிஷ்டவர்களின் திருநாட்கள் இவற்றிற்கு ஏற்றவாறு மாறிவரும் பிரவேச வாக்கியம், சபைச் செபம், நிருப வாக்கியம், படிக்கீதம் முதலிய சங்கீதப் பாடல்கள், சுவிசேஷ வாக்கியம், ஒப்புக்கொடுத்தல் வாக்கியம், அமைதி மன்றாட்டு, உட்கொள்ளுதல் வாக்கியம், உட்கொண்டபின் செபம், இவை அடங்கியிருக்கின்றன.

திவ்விய பூசை துவக்குமுன், அன்றையப் பூசையை எடுத்து, அங்கே காணும் குறிப்புகளை வாசித்து, ஆராதனை முறை அன்று உணர்த்துகிற யோசனை எது என்று அறிந்துகொள்ள வேண்டும்.

அன்றன்று சொல்லவேண்டிய செபங்களிருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க ஆங்காங்கு எண்களும், குறிகளும் உள்ளன. "சாதாரண பாகத்தை"விட்டு, மேற்கூறிய எட்டு எண்களை "விசேஷ பாகத்தில்" கண்டுபிடிக்க வேண்டும்.

கீழேயுள்ள படம் இதற்கு உதவும்: "விசேஷ பாகத்தில்" தேடவேண்டியவை பெரிய எழுத்தில் உள்ளன.

| உபதேசம் கேட்போரின் பாகம் | விசுவாசிகளின் பாகம் |
|---|---|
| 1. பூசை ஆரம்பம் | 10. **ஒப்புக்கொடுத்தல் வாக்கியம்** |
| 2. **பிரவேச வாக்கியம்** | 11. காணிக்கைச் செபங்கள் |
| 3. கிருபை மன்றாட்டு | 12. **அமைதி மன்றாட்டு** |
| 4. சம்மனசுக்களின் கீதம் | 13. முகவுரை |
| 5. **சபைச் செபம்** (ஞாபகச் செபங்கள் இருந்தால்) | 14. திருப்பலி முறை |
| 6. **நிருப வாக்கியம்** (சங்கீதப் பாடல்கள்) | 15. **உட்கொள்ளுதல் வாக்கியம்** |
| 7. ஆசீர் கேட்டல் | 16. **உட்கொண்டபின் செபம்** |
| 8. **சுவிசேஷ வாக்கியம்** | 17. கடைசிச் செபங்கள் |
| 9. விசுவாசப் பிரமாணம் | 18. பீடத்தினடியில் செபம் |

குருவுடன் பூசை செபங்களை வாசித்து முடிக்க இயலாத போது, அச்செபத்தை விட்டுவிட்டு அடுத்த செபத்தைத் துவக்கிக்கொள்ளலாம். இப்பூசைப்புத்தகத்தில் கொடுக்கப்படாத அர்ச்சியசிஷ்டவர்களின் திருநாட்களைக் கொண்டாடும்போது, பஞ்சாங்கத்திலிருந்து அந்தந்த அர்ச்சியசிஷ்டவர், வேதசாட்சியர், ஸ்துதியர், கன்னிகையர். . . . . என்று அறிந்துகொண்டு பூசைப் புத்தகத்தின் கடைசியிலிருக்கும் அர்ச்சியசிஷ்டவர்களின் பொதுப்பாகத்திலுள்ளவற்றைச் சொல்லலாம். மேலும் திவ்விய நற்கருணை உட்கொண்டபின், குரு சொல்லும் செபங்களில் விசுவாசிகளும் சேர்ந்துகொள்ள வேண்டுமென்பது திருச்சபையின் நோக்கம். இவை முடிந்தபின் தங்களுக்குப் பிரியமான செபங்களைச் சொல்லிக்கொள்ளலாம்.

### திவ்விய பூசைக்கு முன் செபம்

நித்திய பிதாவே, தேவரீருடைய அதிமிக நேச குமாரனாகிய சேசுநாதர் சிலுவையில் நிறைவேற்றி, இப்போது இந்தப் பரிசுத்த பீடத்தில் புதுப்பிக்கும் அவருடைய பலியை, உலகத்தின் எத்திசையிலும் இதுவரை செய்யப்பட்டதும், இனி செய்யப்படப் போவதுமான பூசைப் பலிகளோடும், அடியேன் கல்வாரி மலையின்மேல் எங்களுடைய வியாகுலத் தாயானவள் கொண்டிருந்த கருத்துகளோடும் பற்றுதல்களோடும் ஒன்றித்து, படைப்புண்ட எல்லாவற்றின் பேரால் தேவரீருக்கு ஒப்புக்கொடுத்து:-

***முதலாவது:-*** தேவரீர் எல்லாப் படைப்புகள் மீதும் சர்வ அதிகாரம் உடையவர் என்றும், எங்களுடைய ஒரே கடைசி கதியாகிய உமக்கு சகலமும் முழுவதும் கீழ்ப்பட்டவை என்றும் விசுவசிக்கிற நான் தேவரீரை ஆராதித்து, உமக்கு உரிய வணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

***இரண்டாவது:-*** தேவரீரிடம் நான் பெற்றுக்கொண்ட எண்ணிறந்த நன்மைகளுக்காக நன்றி செலுத்துகிறேன்.

***மூன்றாவது:-*** நான் செய்த கணக்கற்ற பாவங்களால் கோபங் கொண்டிருக்கும் உமது தேவநீதியைச் சாந்தப்படுத்தி, அவைகளுக்காகப் பரிகாரமுஞ் செய்கிறேன்.

***நான்காவது:-*** எனக்காகவும், திருச்சபைக்காகவும், (இன்னாருக்காகவும்) துன்பப்படுகிறவர்கள், வருந்துகிறவர்கள் அனைவருக்காகவும், பாவிகள் எல்லோருக்காகவும், உத்தரிக்கிற ஸ்தலத்திலே வேதனைப்படுகிற பரிசுத்த ஆத்துமங்களுக்காகவும், வரப்பிரசாதத்தையும் இரக்கத்தையும் மன்றாடுகிறேன். அப்படியே ஆகக்கடவது.

# ஞான குழந்தைத்துவத்தின் சிறிய வழி!

நமது பரலோக பிதாவாகிய சர்வேசுரன் மட்டில் சிறு பிள்ளைகளுக்கே உரித்தான வகையில் அன்பு கொள்வதே ஞான குழந்தைத்துவம் (Spiritual Childhood) என்ற அர்ச். குழந்தை சேசுவின் தெரேசம்மாள் உரைக்கின்றாள். தனது ஒவ்வொரு தேவைக்கும் சர்வேசுரனையே நாடுவது, அவரை மட்டுமே நேசிப்பது அவருக்காகவே வாழ்வது என்பதே இந்த அர்ச்சியசிஷ்டவள் காட்டும் புனிதத்துவத்தின் மேன்மை! அதனை அடைய அவள் கடை பிடித்த சிறிய வழியே – ஞான குழந்தைத்துவம். அது அவளது ஞான ஜீவிய முறைமை (Spirituality). இதனை ஆன்மாக்களுக்குப் போதிப்பதையே தமது ஒரே விருப்பமாகக் கொண்ட அர்ச். தெரேசாள் அதனை ரோஜா மாரியாக ஆன்மாக்களுக்கு பொழியச் செய்வதே மோட்சத்தில் தமது ஏக அலுவல் என்று கூறினாள். அவளது ஞான குழந்தைத்துவ சிறிய வழியைப் பின்பற்றி புனிதத்தின் உச்சத்தை அடைந்தவர்கள் ஏராளம், ஏராளம். நமது வாசகர் களும் இதனைக் கற்று புனித வாழ்வில் உயர வேண்டும் என்ற ஆவலால் இத்தொடர் துவக்கப்படுகிறது. இக் கட்டுரைத்தொடர் அர்ச். தெரேசம்மாளையும் அவளது சொந்த சகோதரிகளையும் நன்கு அறிந்தவரான சங்.G.மார்டின் சுவாமி என்பவர் எழுதிய "The Little way of spiritual childhood" என்ற நூலின் தமிழாக்கமே. இத்தொடர், நமது சிறிய அர்ச்சியசிஷ்டவள் தெரேசாள் விரும்பிய புனித வாழ்வை நமது வாசகர்களிடையேயும் விளையச் செய்ய உதவும்படி அவளிடம் மன்றாடுகிறோம். அவளுக்கே இத்தொடரை அர்ப்பணம் செய்கிறோம். (ஆசிரியர்)

## அத்தியாயம் - 1

### ஞான குழந்தைத்துவம் என்ற சிறிய வழி, சுவிசேஷத்தை அடித்தளமாகக் கொண்டுள்ளது என்பதைப் பற்றியும், இந்த வழி எதில் அடங்கியிருக்கிறது என்பதன் பேரிலும்.

*நமது பரிசுத்த வேதத்தில் நமக்கு மிகவும் ஆறுதல் அளிக்கும் சத்தியங்களில் ஒன்று ஞானஸ்நானம் என்ற தேவதிரவிய அநுமானத்தின் வழியாக சுபாவத்துக்கு மேலான ஜீவியத்தை நமக்கு ஊட்டி, அதனை அதிகரித்து சர்வேசுரனின் பிள்ளைகளாக நம்மை ஆக்குகிறது என்பதாகும்.*



*"நாம் சர்வேசுரனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்பட்டு, மெய்யாகவே அவருக்கு பிள்ளைகளாக இருக்கும் படிக்கு எத்தன்மையான பரம அன்பைப் பிதாவானவர் நமக்குத் தந்தருளினார்" (1 அரு. 3:11).*

*சர்வேசுரனுடைய பிள்ளை என்ற இந்த கருத்தே வரப்பிரசாத ரீதியில் சர்வேசுரனுடனான நமது உறவுக்கு அடிப்படையாக இருக்கிறது. இந்த கருத்தே வேதாகமத்தில் துவக்கம் முதல் இறுதி வரை எங்கும் வியாபித்துக் கிடக்கின்றது. இதனையேதான் நமதாண்டவரும் தொடர்ந்து சொல்லியிருக்கிறார். அவர் தனியே தமது அப்போஸ்தலர்களிடமானாலும் சரி, ஜனக்கூட்டத்தாரிடம் பொதுவிலேயானாலும் சரி, சர்வேசுரனைப்பற்றிப் பேசும்போ தெல்லாம் அவரை வேறு பெயரில் அல்லாமல் பிதா என்றே அழைக்கின்றார். ஆக, அர்ச். மத்தேயு சுவிசேஷத்தில் மலைப்பிரசங் கத்தில் மட்டுமே 'பிதா' என்ற வார்த்தையை 16 தடவை கூறி யுள்ளார்.*

*பரிசுத்த திருச்சபையும் இந்த உணர்வுபூர்வமான உண்மையைக் கவனிக்கத் தவறியதில்லை. பூசையில் முதலாய், "பரலோக மந்திரத்தை" (Pater Noster) சொல்லுவதற்கு முன்பாக சற்று கவனமெடுத்து கூறுகிறது. சர்வேசுரனைப்பற்றி பேசும்போ தெல்லாம் பிதா என்ற பெயரிலே அழைக்கத் திருச்சபை துணிகிறது. இது ஏனெனில, சர்வேசுரன் தாமே அதற்கு (திருச்சபைக்கு) இந்த இரட்சிக்கும் கட்டளையைத் தந்து கற்பிக்கிறார். ஆகையினால்தான் திருச்சபை "பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே" என்று சொல்ல வைக்கிறது.*

*இதனை சந்தேகிப்பது என்பது நியாயமற்றதாகிவிடும். சர்வேசுரன் தம்மையே நமக்கு உன்னதமான பெரிய குடும்பத்தின் தந்தையாகத் தந்துள்ளார். சர்வேசுரன் ஜெபத்தில் மட்டுமல்லாது, ஒவ்வொரு சூழ்நிலையிலும் நம்மை அவருடைய பிள்ளையாகப் பாவித்து அதற்கேற்ப நடக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.*

## 1. சர்வேசுரன் நமக்கு எப்பேர்ப்பட்ட பிதாவாக இருக்கிறார்.

நடைமுறையில் பரலோகத்தில் இருக்கிற இந்த பிதாவைக் குறித்து என்ன நினைப்பது? இவ்வளவு அழகான பெயரை அவருக்கு அளிக்கும் நாம், ஒரு குழந்தையின் மனதில் தனது தகப்பனைக் குறித்து எழும் எண்ணங்களை, அதாவது கனிவு, பரிவு, ஆவல் பிள்ளையின் நலனில் அக்கறை கொண்டு கவனத்தோடுகூடிய விழிப்புணர்வும், சொல்லாலும் செயலாலும், பாவனையாலும் ஏன் எல்லா சூழ்நிலைகளிலும் எல்லையில்லா அன்போடு நேசிக்கும் தந்தைக்குரிய நன்மைத்தனம் இவைகளை அவருக்க உரியதாகக் கருதாமல் இருக்கலாமா? அவர் மேல் நாம் கொள்ளும் சங்கை மரியாதையின் நிமித்தம் அவரை வெகு தொலைவில் இருக்கும் ஒருவராக, அணுகிச் செல்லமுடியாத இடத்தில் இருப்பவரைப் போலவும், அவர் கொண்டிருக்கும் மகிமைபிரதாபத்தின் காரணமாக நம்மேல் சிறிது இரக்கப்பட்டு நம்மை "பிதாவே" என்று அழைக்க அனுமதித்திருப்பதே பெரிய காரியம் என்றும், நாம் நினைக்கலாமா? பரலோகத்திலிருக்கும் நமது பிதா வெகு தொலைவில் இருப்பதா? அவரில் நாம் நமது ஜீவியத்தையும், அசைவையும், இருத்தலையும் கொண்டிருக்கையில் அது எங்ஙனம் முடியும்.

இதை நமக்குச் சொல்வதற்கு நமது புத்தியே போதுமானதாய் இருக்கிறது. ஆனால் விசுவாசமோ இன்னும் சற்று மேலாகச் சென்று, ஞானஸ்நானத்தின் வழியாக நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. வரப்பிரசாதத் தினால் பரிசுத்த தமதிரித்துவம் நமது ஆத்துமத்தில் வாசம் பண்ணுகிறார் என்று கற்பிக்கிறது. இது ஒரு தகப்பன் தன்னுடைய பிள்ளையின் வீட்டில் மிகப் பாசத்தோடு வந்து தங்குவது போலிருக்கிறது. எவனாகிலும் என்னை நேசித் தால் எனது பிதாவும் அவனை நேசிப்பார். நாங்கள் அவனிடம் வருவோம். அவனில் தங்குவோம்.

நமக்கு இவ்வளவு அருகில் இருக்கும், எப்பொழுதும் நம்மிலேயே வாசம் செய்யும் இவர், அதே வேளையில் அளவற்ற சிநேகமும், நன்மைத்தனமும் உடையவராய் இருக்கிறார். இப்படிப்பட்டவர் எப்படி அலட்சியத்தோ டோ அல்லது பற்றுதல் இன்றியோ நம்மை நடத்துவார்? உண்மை என்னவென்றால் அவருடைய தந்தைக்குரிய பராமரிப்பானது நம்முடைய ஜீவியத்தின் மிகச் சிறிய காரியங்கள் வரை பரவி விரிந்து இருக்கிறது. நம்முடைய தலைமுடி முதலாய் எண்ணப்பட்டிருக்கிறது; அவரது அனுமதி இல்லாமல் அதில் ஒன்று முதலாய் கீழே விழாது.

ஒரு குழந்தைக்கு தன்னுடைய தந்தையைக் குறித்தான உயர்வான எண்ணங்கள், ஒரு மனிதனின் இதயத்தில் இடம் பெறுவதற்கு முன் அது சர்வேசுரனுடைய இருதயத்தில் இருக்கிறது. இதுவே மற்றவைகளுக்கு ஊற்றா கவும் இருக்கிறது. சர்வேசுரன் தனது நன்மைதனத்தின் சிநேகத்தின் ஒரு சிறு 'தீ' பொறியை மனிதனுடைய மனதில் வைத்ததன் காரணமாகவே, இவ்வுலகத் தந்தையர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு நல்லவர்களாய் இருக்கி றார்கள். ஒரு 'தீ' பொறி என்கிறேன், பெரிய தீ சுவாலையை ஒப்பிட்டுப் பார்த்தால் ஒரு ஒரு 'தீ' பொறி எத்தன்மையது? சூரியனை ஒப்பிடும்போது ஒரு மங்கலான ஒளிக்கதிர் எம்மாத்திரம்? நல்ல சர்வேசுரனுடைய இருதயத்தோடு ஒப்பிடும்போது சிருஷ்டிகளிலெல்லாம் மேலான சிருஷ்டி யின் இருதயம் எத்தன்மையது?

நம் பரமபிதா சர்வேசுரனாய் இருப்பதால், மனிதர்கள் தங்கள் பாசத்தை வெளிப்படுத்துவது போல நடந்து கொள்வதில்லை என்று யாராவது மறுப்பு தெரிவித் தால், அதற்கு நான் அளிக்கும் பதில்: கடவுள் மனிதனானதே, மனித இதயத்தைக் கொண்டு நம்மை நேசிப்பதற்காகவே. சாவோ, உயிர்ப்போ அவருடைய மனித சுபாவ நன்மை தனத்தை நீக்கிவிடவில்லை. அவர் இன்று மோட்சத்திலும், தேவநற்கருணையிலும், இம்மண்ணுலகில் வாழ்ந்த போது எப்படி எப்பொழுதும் இனிமையாகவும், நேசிக்கப்படத் தக்கதாகவும், மிக நல்லவராகவும், இரக்கமுள்ளவராகவும், பூமியிலுள்ள மானிடர்களின் சந்தோஷத்தை எவ்வாறு விரும்பினாரோ அவ்வாறே இருக்கிறார்.

தேவனும் மனிதனுமான நமதாண்டவரிடத்தில் அவருடைய தெய்வீகம், மனித சுபாவத்தின் கவரச் பண்புகளை எந்தவிதத்திலும் குறைக்கவோ அல்லது அவரது மனித சுபாவத்தின் உன்னதமான பண்புகள், அவரது தெய்வத்துவத்தின் பண்புகளை பலவீனமடையச் செய்ய வில்லை. எனவேதான் பரலோகத்தில் இருக்கிற நம் பிதாவை குறித்தான நமது எண்ணங்கள், மிக்க நேசமும், பாசமும் கொண்டிருக்கும் உலக தப்பன்மார்களிலும் மேலா னவராக மட்டும் கருதாமல், அதையும்விட இன்னமும் மேலாக, ஒப்பிடவே முடியாத ஞானமும் வல்லமையும் கொண்டு, அவருடைய பராமரிப்பை எப்போதும் தந்து கொண்டிருப்பவராக நாம் கருத வேண்டும்.

(தொடரும்)

**"...மனித அவதாரமான வார்த்தையானவரின் பரம இரகசியத்தின் மூலமாகத் தேவரீருடைய மகிமையின் புதிய ஒளியானது எங்களுடைய மனதின் கண்களுக்குப் பிரகாசித்தது. இதனால் நாங்கள் சர்வேசுரனைக் கண்களாற் பார்ப்பவர்களாகி, இவர் மூலமாக காணக்கூடாதவைகளிடமாய் வசீகரிக்கப் பெறுவோமாக!"** (கர்த்தர் பிறந்த திருநாளின் முகவுரை)

# ‘Sanguis Martyrum Semen Christianorum’

## (வேதசாட்சிகளின் இரத்தம் கிறீஸ்துவர்களை விளைவிக்கும் வித்து!)

# கத்தோலிக்க விசுவாசத்திற்காக உயிர்நீத்தவர்களின் வரலாறு

**(இங்கிலாந்து நாட்டில் ஆங்கிலிக்கன் புராட்டஸ்டாண்ட் பிரிவினையின் போது தங்களது சத்திய கத். விசுவாசத்தில் உறுதியாக இருந்து பதிதத்தை மறுத்து தங்களுடைய இன்னுயிரை நீத்தவர்களின் வரலாறு இங்கே வெளியிடப்படுகிறது.)**

## (6) அர்ச். ஹென்றி வால்போல் (St. Henry Walpole. S.J.)

அது 1581 டிசம்பர் முதல்நாள் அன்று அதிகாலையிலிருந்தே மழை - ஒரே அடை மழை! விடாது பெய்யும் அந்த மழையையும் அலட்சியம் செய்து பெரும் கூட்டம் லண்டன் டைபர்ன் (Tyburn)சிறைச்சாலையின் முகப்பிலே நின்றுகொண்டிருந்தது. வழக்கமாக அங்கே மரண தண்டனை விதிக்கப்படும். மக்கள் முன்னிலையில் பகிரங்கமாக நிறைவேற்றப்படும். தண்டனைக் காட்சியைக் காண மக்கள் வருவர். ஆனால் இன்று வழக்கத்துக்கு மாறாக மக்கள் பெருங்கூட்டமாகக் கூடியுள்ளனரே? என்ன காரணம், யார் தண்டனை பெறப்போகிறார்கள்? ஆம்! இன்று லண்டன் மாநகரின் புகழ்பெற்ற பேச்சாளரும் எழுத்தாளரும் சேசு சபை குருவுமான எட்மண்ட் காம்பியன் மரண தண்டனை பெறவிருக்கிறார்.



அர்ச். ஹென்றி வால்போல் சே.ச.

அங்கே கூடியிருந்த மக்கள் மனதில் “ஐயோ! இப்படி கொடூர தண்டனை பெறுவதற்கு அவர் செய்த குற்றம்தான் என்ன? அரசி ஏற்படுத்தியுள்ள புராட்டஸ்டான்ட் பதிதத்தை ஏற்கவில்லை - பாப்பரசரை மறுத்து அரசியே திருச்சபையின் தலைவி என்பதை ஏற்க மறுத்தது - இங்கிலாந்து நாட்டில் பாப்புவின் வேதமான கத். திருச்சபையை அரசுக்கு விரோதமாக போதித்தது இவைகளே அவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள். இதற்காகத் தானே இங்கே தினமும் மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது” என்றெல்லாம் எண்ண அலைகள் ஓடச் செய்வதறியாது திகைத்தனர். தங்களது பொக்கிஷமான கத். விசுவாசம் தங்கள் நாட்டில் அழிக்கப்பட்டுவிட்டதே என்ற பரிதாப ஆதங்கம் உள்ளத்தில் எழுந்தாலும் கொடூர தண்டனையைக் குறித்து வாயடைத்தும் போனார்கள்.

இதற்குள் அங்கே ஆரவாரம் எழ, எட்மண்ட் காம்பியன் குரூரமாக இழுத்து வரப்பட்டார். ஒளி வீசிப் பிரகாசமாக ஜொலிக்கும் அவரது முகத்தில் எந்தவிதமான மரண பயமோ வேதனையோ நடுக்கமோ இல்லாததைக் கண்டு மக்கள் கூட்டம் திகைத்தது. அவர் மக்களை ஆசீர்வதிப்பதும், ஏதோ கூறி ஜெபிப்பதும் குழுமியிருந்த மக்கள் கூட்டத்திற்கு பரபரப்பை ஊட்டியது. அவர் தூக்குமரத்தின் அருகே நின்று பேசுகிறார். அதனை கேட்க மக்கள் கூர்ந்து கவனிக்கிறார்கள். சப்தம் சரியாக கேட்கவில்லை. “...நான் சத்திய வேதத்திற்காக மரணமடைகிறேன். இங்கிலாந்து அரசிக்காக ஜெபிக்கிறேன்... என் நாடே - இங்கிலாந்து தேசமே... உன் செல்வமான கத்தோலிக்க விசுவாசத்தை பெற்றுக் கொள்...” என்ற அவரது கடைசி பிரசங்கக் குரல் சன்னமாக பலவீனமாக ஒலிக்கிறது.

அங்கே கூட்டத்தை விலக்கியவாறு முண்டி அடித்துக்கொண்டு ஒரு இளைஞன் முன்னேறினான். ஐயோ! தமது மனங்கவர்ந்த “காம்பியன் சுவாமி” மரண தண்டனை அடையவிருக்கிறாரே. நாம் சற்று பிந்திபோய் விட்டோமே, அவரது முகத்தை கடைசியாக ஒரு தடவையாவது பார்க்கவேண்டும் என்ற அவனது மனம் பரபரக்க கூட்டத்தை முரட்டுத்தனமாக விலக்கி முன்னேறினான். எரிச்சலடைந்த மக்கள் விலகி வழிவிட “அப்பா! இப்போது முதல் வரிசையைப் பிடித்தாகிவிட்டது. ஐயோ! அங்கே காம்பியன் தூக்கிலிடப்பட்டு விட்டாரே. இதோ அவரது உடல் தூக்குக் கயிறிலிருந்து வெட்டப்பட்டு கீழே விழத்தாட்டப்படுகின்றனவே... ஐயகோ! ஆ! அவரது உடல் கொடுமையாக கை கால்கள் வெட்டப்படுகின்றனவே. ஆ! இதென்னக் கொடூரம்!” அந்த இளைஞனின் உள்ளம் திருதிருவென எரிந்தது. கழிவிரக்கத்தால் துவண்டது. “ஆ! ஏன் இந்த கொடுமை. விசுவாசத்திற்கு பிரமாணிக்கம் காத்ததலல்வா! அப்படியானால் விசுவாசம் எத்துணை மேலானது, உயர்ந்தது, உன்னதமானது. மரணத்தைவிட சிறந்தது... விசுவாசம்”. அவனது மனம் விசுவாச உறுதியால் நிரம்பியது. அச்சமயம் “ஆவென்ற” அலறல் - அழுகைக் குரல் மக்களிடமிருந்து பெருக்கெடுக்க சலசலப்பு தோன்றியது.

அப்போது சற்று தூரத்தில் உடல் வெட்டப்படும் வேதசாட்சியின் இரத்தத் துளிகள் பீறிட்டு பாய்ந்து நாலா திசையிலும்

சிதறி பூமியை நனைத்தது. அதன் ஒரு துளி முன் வரிசையில் மனவேதனையோடும் அச்சத்தோடும் நின்றுகொண்டிருந்த அந்த இளைஞனின் முகத்தில் தெறித்து விழுந்தது. வேத சாட்சியின் புனிதமான இரத்தம் தம் மீது தெறித்ததைக் கண்ட அந்த 23 வயதே நிரம்பிய இளைஞன் பதட்டமடைந் தாலும் மிகுந்த பக்தியோடு தமது கைக்குட்டையால் அதனை மெல்ல துடைத்தான். பொக்கிஷமென அதனை பக்தியோடு தம்மிடம் வைத்துக்கொண்டான். அந்த கணத் திலேயே அவனது உள்ளம் உருகத் துவங்கியது. விசுவாச உறுதியடையத் துவங்கியது.... ஆம்! அவன் மாறினான். உலக வாழ்வில் திளைக்க விரும்பிய அவன் இன்று முழு மனமாற்றம் அடைந்தான். அவன் வாழ்வு தலைகீழாகிப் போனது. ஆம்! அவனும் இன்னும் 10 ஆண்டுகளில் தன்னையே சர்வேசுரனுக்கு அர்ப்பணித்து குருவாகி, அங்கே கொல்லப்பட்ட காம்பியன் சுவாமியைப் போலவே கத். விசுவாசத்திற்காக இதே இடத்தில் இதே சித்திரவதையைப் பெற்று மரணமடையவிருக்கிறான். அந்த இளைஞன் யார்? அவன்தான் ஹென்றி வால்போல் - ஆம். வேதசாட்சியான அர்ச். **ஹென்றி வால்போல் சே.ச.**

### இளமைப் பருவம்

ஹென்றி வால்போல் லண்டனை அடுத்த நார் ஃபோல்க் (Norfolk) நகரைச் சேர்ந்த கிறீஸ்டோபர் வால்போல் என்பவரின் மகனாக 1558 அக்டோபர் திங்களில் பிறந்தார். தந்தை பெரிய அளவில் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தாலும், ஹென்றியின் மாமன் ஜான் வால்போல் புகழ்பெற்ற வழக்கறிஞராகத் திகழ்ந்தார். 1720-ல் இங்கிலாந்தின் முதல் பிரதம மந்திரியான சர் இராபர்ட் என்பவரின் கொள்ளுத் தாத்தாவான கால்பட் வால்போல் என்பவர் ஹென்றியின் நெருங்கிய உறவினர். புகழ்பெற்ற குடும்பத்தில் வந்த ஹென்றி பிறந்தபோது அரசி மேரி ஆட்சியில் இருந்தாள். எனவே கத்தோலிக்கர்கள் பயமின்றி வாழ்ந்தனர். 8வது வயதில் நார்விச் இலக்கண பள்ளிக்கு அனுப்பப்பட்டார். கல்வியில் சிறந்து விளங்கிய ஹென்றி லத்தீன், கிரேக்கம், ஆங்கில இலக்கியம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றார். இயல்பாகவே பாடல்கள் எழுதுவதில் திறம் பெற்றிருந்தார்.

அவன் பள்ளியில் படிக்கும் காலத்தில் இங்கிலாந்தில் கத்தோலிக்க மதத்திற்கு எதிரான அலைகள் எழத் துவங்கின. பாப்பரசருக்கெதிரான செயல்கள் மீண்டும் அரங்கேறத் துவங்கின. தனது 17வது வயதில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் அர்ச். பீட்டர் கல்லூரியில் சேர்ந்து உயர் கல்வி கற்கலானார். அச்சமயத்தில் ஆட்சி பொறுப்பில் வந்த எலிசபெத் அரசி கத்தோலிக்கத் திருச்சபைக்கு எதிரான செயல்பாடுகளால் புராட்டஸ்டாண்ட் பதிதம் மீண்டும் தலைதூக்கியது. தங்கள் கத்தோலிக்க விசுவாசத்திற்கு பிரமாணிக்கமாயிருப்பவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். அரசியான எலிசபெத் தனது தந்தை 8-ம் ஹென்றியையே மிஞ்சும் அளவில் கலாபனையைத் தூண்டி விட்டாள். இங்கிலாந்தில் திருச்சபையின் தலைவர் அரசியே என்ற சட்டத்தை மக்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு உறுதி மொழி வழங்கவேண்டும். அப்படி உறுதிமொழி வழங்கிய மாணவர்கள் மட்டுமே தங்கள் கல்லூரி பட்டப்படிப்பில் தகுதியானவர்களாக உயர்த்தப்பட்டார்கள். இதனை சற்றும் விரும்பாத ஹென்றி அப்படி தேவதுரோகமான சட்டத்தை ஏற்றுப் பட்டம் பெறுவதைவிட, பட்டமே தேவையில்லை என்ற முடிவுக்கு வந்தார். எனவே கல்லூரியி லிருந்து வெளியேறி 1579-ல் தமது 21-வது வயதில் Grays Inn என்ற விடுதியில் பணியாளராக சேர்ந்தார். அந்த ஆண்டில் தான் காம்பியன் குருப்பட்டம் பெற்று, இங்கிலாந்தில் கத். விசுவாசத்தை மக்களிடையே போதிப்பதற்கு இரகசியமாக இங்கிலாந்தில் நுழைந்தார்.

Grays Inn என்ற அந்த விடுதி கத்தோலிக்க இளைஞர் கள் ஒன்று சேரும் இடமாகத் திகழ்ந்தது. அங்கே பணக் காரக் குடும்பத்து இளைஞர்கள் ஒரு இயக்கமாகச் சேர்ந்து Douai மற்றும் உரோமையிலுள்ள ஆங்கில கல்லூரியில் பயிலும் குருமாணவர்களுக்கு உதவி செய்து வந்தனர். அந்த வகையில் காம்பியன் சுவாமியின் அறிமுகம் கிடைத்தது. அப்போது அவர் ஆங்கிலிக்கன் பதிதத்தை எதிர்த்து கத். விசுவாசத்தை பாதுகாக்க 10 காரணங்கள் என்ற தனது புகழ்பெற்ற நூலினை வெளியிட அச்சகத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். வெஸ்ட் மினிஸ்டர் ஹாலில் அர்ச். காம்பியனைக் கண்டு அவரது ஆற்றல்மிக்க விசுவாசம் நிறைந்த பிரசங்கங்களையும், வீர உரைகளையும் கேட்டு வியப்பில் ஆழ்ந்தார் ஹென்றி வால்போல். அதனால் தமது விசுவாச வாழ்வில் உறுதியடைந்தவர் காம்பியன் சுவாமி பிடிபட்டு விசாரணைக் கைதியாக்கப்பட்ட செய்தியால் வேதனை அடைந்தார். பின்னர் 1581 டிசம்பர் முதல் நாள் அன்று அவரது மரணதண்டனை நிறைவேற்றப்படும் போது அவரை கடைசி தடவையாக பார்க்கச் சென்றார். அப்போதுதான் காம்பியன் சுவாமியின் இரத்தத் துளிகள் முன் வரிசையில் பதைபதைப்புடன் நின்றிருந்த ஹென்றியின் மீது தெளித்தது. அதுவே அவரது வாழ்வை மாற்றக் காரண மாயிற்று.

(தொடரும்)

## ஆண்டவரின் பிரதிநிதிதான் !

**ஒருமுறை பத்திரிகையாளர் ஒருவர் பாப்பரசர் முத். 9-ம் பத்திநாதரைப் பேட்டி காணும்போது அவரது ஆட்சிக்காலத்தில் எப்போதும் துன்பதுரிதங்களும், புரட்சி போராட்டங்களுமே காணப்படுகிறதே, இவை எப்போது முடிவுக்கு வரும் ? என்று ஆதங்கத்தோடு கேட்டார்.**

**அதற்கு பாப்பரசர்: "என்னால் எப்போது என்று கூற முடியாது. ஏனெனில் நான் நமதாண்டவரின் பிரதிநிதிதானேயொழிய அவரது காரியதரிசியல்லவே !" என்று பதில் அளித்தார்.**

# அர்ச். பத்தாம் பத்திநாதரின் திருச்சபையைக் குறித்தான ஆவல்கள்!

தற்கால பாப்புமார்களில் அர்ச்சியசிஷ்டவராகவும், நவீனத் தப்பறையின் சம்மட்டியாகவும், திருச்சபையின் தலைசிறந்த வழிகாட்டியுமாகத் திகழ்ந்தவர் அர்ச். 10–ம் பத்திநாதர் பாப்பரசர் ஆவார். இவ்வாண்டு ஆகஸ்ட் 4–ம் நாள் அவர் குருக்களுக்காக எழுதிய "Hærent animo"என்ற நிருபம் வெளியிடப்பட்ட நூற்றாண்டின் நிறைவாக உள்ளது. இதனை சிறப்பிக்கும்படியாக 2003–ம் ஆண்டு நவம்பர் 16–ம் நாளன்று பிரான்ஸ் நாட்டு, கோல்மா நகரில் அர்ச். ஜோசப் இல்லத்தில் வந். மேற்றிராணியார் திஸ்ஸியர் த மாலாரி ராய் ஆண்டகையவர்கள் நிகழ்த்திய பிரசங்கத்தை தமிழாக்கம் செய்து வெளியிட்டு மகிழ்கின்றோம். ஆ.ர்.)

## 2

### திருச்சபையின் ஒழுங்கு கிரமம்

*அர்ச். பத்தாம் பத்திநாதர், திருச்சபை தன்னுடைய நோக்கத்தை, பணியை செம்மையாய் நிறைவேற்ற ஏற்ற வழிகளை அமைத்து கொடுக்க விரும்பினார். இதற்கு நீங்கள் சிறிதும் எதிர்பார்த்திராத ஒன்றைச் செய்தார் - அது* ***திருச்சபை சட்டத்தை*** *ஒழுங்குப்படுத்தினார்! திருச்சபையின் தொடக்கத்திலிருந்து நிலவி வந்த சட்டங்களை ஒன்றாய் சேகரித்து தயார் செய்ததின் மூலமாய் புரட்சிகரமான ஒரு செயலைச் செய்வித்தார். பாப்பானவரின் ஆணைகள், ஏற்கனவே இருந்துவந்த திருச்சட்டங்களைக் கொண்ட மத்திய காலத்திய தொகுப்பினை மட்டுமல்லாமல் நூற்றாண்டுகளாய் விளங்கி வந்த தெளிவற்ற சில சமயங்களில் குழப்பங்களை வருவிக்கக்கூடிய சட்டங்கள் அனைத்தையும் ஒருமுகப்படுத்தினார். சில வேளைகளில் முரண்பாடாய் இருக்கும் சட்டங்களை கிரமப்படுத்துவது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. ஆனால் எப்போதும் ஒழுங்கு கிரமத்தை அநுசரித்து வந்த அர்ச். 10-ம் பத்திநாதர் ஏற்கனவே மாந்துவா மற்றும் வெனிஸ் மேற்றிராசனங்களில் இதைத் தமது ஆட்சியில் காண்பித்து வந்த இவர், பாப்பானவரின் ஆட்சி பீடமேறிய சில காலத்திற்குள்ளாகவே திருச் சட்டத்தில் கிரமத்தை ஏற்படுத்த உத்தரவிட்டார். ஒருவேளை அவர் கிரமம் நிறைந்த மனிதராய்* (Man of order) *இருந்தபடியால்தான் இப்பணி யை ஏற்று செய்தார் என்று உங்களில் சிலர் நினைக்கக்கூடும். ஆம்! ஆனால் அதுமட்டுமே காரணம் அல்ல! முதன்முதலான காரணம் அவர் ஒரு அர்ச்சியசிஷ்டவராக இருந்தது! நீதி என்ற புண்ணியத்தின் கனிதான் ஒழுங்கு கிரமமாகும். இன்னும் நன்றாய் சொல்ல வேண்டுமென்றால் அதைவிட மேலாக, அனைத்தையும் சர்வேசுரனிடம் கொண்டுசெல்லும் சிநேகத்தின் கனிதான் ஒழுங்கு கிரமம். திருச்சபை ஒழுங்கு கிரமத்தோடு இருப்பது, சர்வேசுரனை சேவிப்பதற்கும், ஆன்மாக்களை அவரிடம் இட்டுச் செல்வதற்குமேயாகும். இவ்வாறு ஒழுங்கும் கிரமமும் இருப்பதற்கு நோக்கம் ஒன்றிருக்கிறது. திருச்சபையில் சரியான கிரமம், ஆத்தும இரட்சணியத்தை சர்வேசுரனையும் நோக்கமாக கொண்டுள்ளது. இவர் அர்ச்சியசிஷ்டவராக இருந்தபடியால்தான் கிரமத்தை* (order) *ஏற்படுத்துவது அவசியம் என்பதையும், திருச்சபையின் நலன், நல்லவிதமாக ஏற்படுத்தப்பட்ட சட்டத்தை சார்ந்திருக்கிறது என்பதையும் அறிந் திருந்தார்.*



அர்ச். பத்தாம் பத்திநாதர் (பாப்பானவர்)

*இப்போது 2-ம் வத். சங்கத்திற்குப் பிறகு என்ன நடந்தது என்று நீங்கள் அறிவீர்கள்: எல்லாம் நேர்மாறாக - நேர் எதிராகச் செய்யப்பட்டது. திருச்சட்டம் மாற்றப் பட்டது - மாறிவரும் பழக்கவழக்கத்திற்கு இது தேவையாகத்தான் இருக்கக்கூடும் - ஆனால் இது தவறான எண்ணத்தோடு* (Liberalism) *விடுதலையியல் மற்றும்* (Ecumenism) *சமய ஒன்றிப்பு என்ற தவறான கொள்கைகளினால் தூண்டப் பட்டு செய்யப்பட்டது. எனவே புதிய திருச்சட்டம் ஒழுங்கு கிரமத்தின் பணியென்று சொல்வதற்கில்லை. இது குழப்பத்தின் வழிவகை! இது ஜீவியத்தின் பணியல்ல, மரணத்தின் பணி!*

*ஆத்தும இரட்சணியத்திற்காக திருச்சட்டத்தை ஒழுங்குபடுத்திய அர்ச். 10-ம் பத்திநாதருக்கு, ஆன்மாக்களை சத்தியத்தில் நிலைநிறுத்த, ஜீவிய பாதையில் இட்டுச்செல்ல செய்த இம்மகத்தான காரியத்திற்காக நாம் நன்றி சொல்ல வேண்டும்.* **(தொடர்ச்சி 15–ம் பக்கம்**

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை

## அறிந்து கொள்வோம்!



[கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். – ஆசிரியர்]

### முதல் பாகம்

#### இரண்டாம் பிரிவு (உபதேசப் பாகம்)

### 7. படிக்கீதம், அல்லேலூயா, நெடுங்கீதம், தொடர்கீதம்

நிருபம் வாசிக்கப்பட்டவுடன் விசுவாசிகள் “சர்வேசுரனுக்கு தோத்திரம் - Deo gratias” என்று சொல்ல, இப்போது குரு **படிக்கீதத்தையும்** (Graduale) அல்லேலூயா கீதத்தோடு சேர்ந்த வசனங்களையும் வாசிக்கிறார்.

தேவாலயங்களில் விசுவாசிகளின் பெயரால் திவ்விய பலிபூசையின் பல்வேறு பகுதிகளிலும் பாடுவதற்கெனவே பாடற்குழுவினரை திருச்சபை ஏற்படுத்தியுள்ளது. படிக்கீதமானது, குருவானவரால் சாதாரணமாகச் சொல்லப்பட்டாலும் பாடற்பூசைகளில் பாடற் குழுவினரால் இசைக்கப்படுகின்றன. இந்த கீதங்கள் மிக நேர்த்தியான வகையில் பூசையில் சேர்க்கப்பட்டு திவ்விய பலியின் உன்னத நோக்கத்தை அதாவது சர்வேசுரனோடு ஐக்கியமாகி நடைபெறவிருக்கும் தெய்வீகப் பலியில் நம்மையும் இணைக்கும் மேரையாக அமைக்கப்பட்டுள்ளன. இவை தெய்வீக வழிபாட்டை மிகவும் ஆடம்பரமானதாகவும் உன்னதமானதாகவும் நமது மனதை மேலே - சர்வேசுரனை நோக்கி எழுப்பக்கூடியவையாகவும், பக்தியில் உருக்கத்தையும், புண்ணியத்தின் மீது பற்றுக்கொள்ளச் செய்பவை யாகவும் இருக்கின்றன. கடினமான இதயத்தை உருக்கி சர்வேசுரன்பால் நம்மை சேர்ப்பவையாகவும், அதே சமயம் நமது பாவங்களை நினைத்து கண்ணீர் சொரிந்து நமது மனந்திரும்புதலுக்கு ஒரு வாய்க்காலாகவும் திகழும் இவை நமது ஆன்மாவை வரண்ட இந்த பூமிக்கு மேலே உயர்த்தி மோட்சம் பற்றிய எண்ணத்தில் நம்மை ஆழ்த்துபவையாக இருக்கின்றன. அர்ச். அகுஸ்தினார் அம்புரோசியாரது கீதங்கள் தமது ஆன்மாவை மிகவும் பாதித்தன என்று கூறியவர், “...ஓ ஆண்டவரே, எனது அழுகைக் கண்ணீர்தான் எத்தகையது? உமது ஆலயத்தின் பாடல்களின் கீதங்களில், அவற்றின் தெய்வீக கானத்தில் நான் என்னையே இழந்து போனேன். உமது திருச்சபையின் இனிமையான சப்தங்கள் எனது செவிகளில் உமது நித்திய உண்மைகள் இறங்கி துளித்துளியாக எனது இதயத்தை ஊடுருவுவதாக இருக்கின்றன. பக்தி உருக்கம் தூண்டப்பட கண்ணீர் வடிய உம்மில் என்னைக் கலக்கச் செய்யும் உமது கீதங்களின் வல்லமைதான் எத்தகையது! ஆ! நான் எத்துணை மகிழ்ச்சியானவன்...!” என்று படிக்கீதங்களின் உண்மையை புகழ்கின்றார். (confess. IX, chap.6)



படிக்கீதங்கள் விசுவாசிகளின் ஞான வறட்சியை, சோர்வை அசமந்தத்தினை அகற்றி பீடத்தில் நிறைவேற்றவிருக்கும் தெய்வீக கைங்கரியத்தில் பக்தியுடன் பங்கேற்கத் தூண்டுகின்றன.

நிருபத்திற்குப் பிறகு - சுவிசேஷத்திற்கு முன்பு வரும் கீதங்கள் (chants) இந்த இரு வெவ்வேறு வாசகங்களை இணைப்பவையாகத் திகழ்கின்றன. இவை திருச்சபையின் திருவழிபாட்டு முறைமையின் வேறுபாட்டிற்கேற்ப மாறுபடுகின்றன. அதற்கேற்ப பெயரிட்டு அழைக்கப்படுகின்றன. அவை படிக்கீதங்கள், அல்லேலூயா கீதம், நெடுங்கீதம் (tract), தொடர்கீதம் (sequence). சாதாரணமாக பூசையில் படிக்கீதங்களும் அதனோடு அல்லேலூயா கீதமும் காணப்படும். சில வேளைகளில் படிக்கீதம் - அல்லேலூயா - நெடுங்கீதம் என தொடர்ந்து இசைக்கப்படும். உயிர்ப்பு (Easter) காலங்களில் முதலில் படிக்கீதம் பிறகு பெரிய (நீண்ட) அல்லேலூயாவோ அதனைத் தொடர்ந்து நெடுங்கீதமோ பாடப்படும்.

#### படிக்கீதங்கள் (The Gradual)

Graduale என்று அழைக்கப்படும் வார்த்தை Gradus - step - படி அல்லது நிலை என்ற பொருளைத் தரும். அதனால் அவை படிக்கீதங்கள் என அழைக்கப்படுகின்றன. பூசையில் நிருபம் - சுவிசேஷத்திற்கிடையே வரும் பதிலுரைக்கீதம்

அதாவது அவை எந்த இடத்திலிருந்து பாடப்படுகின்றன வோ அதனைச் சுட்டிக்காட்ட 'படிக் கீதம்' என்றும் கூறப் படுகிறது. நிருபம் வாசித்து முடிக்கப்பட்டதும் பாடற் குழுவை நடத்திச்செல்பவர் நீண்ட குரலெடுத்துப் பாடு கிறார். அவரோடு சேர்ந்து பாடற் குழுவினர் தேவாலயத்தில் பீடத்தின் படிக்கட்டில் - அதாவது அம்போ (Ambo) பீடத்திற்கு இணையான நிலையிலிருந்து எழுந்து நின்று படிப்பார்கள்.

அப்போஸ்தலிக்கச் சட்டங்கள் (II chap.57) பழைய ஏற்பாட்டிலிருந்தும், சங்கீதங்களிலிருந்தும் கீதங்கள் தேர்ந் தெடுக்கப்பட உரைக்கின்றன. அர்ச். அகுஸ்தீனார், நிருபம் மற்றும் சுவிசேஷத்திற்கிடையேயான நேரத்தில் முழு சங்கீத மும் பாடப்படவேண்டும் என்று குறிப்பிடுகின்றார். 5-ம் நூற்றாண்டு வரையிலும் அவ்வாறே, முழு சங்கீதமும் பாடப் பட்டு வந்தது. ஆனால் அர்ச். பெரிய கிரகோரியாரின் வழி காட்டுதலின்படி இந்த பதிலுரை பாடல் (Antiphonarium) குறைக்கப்பட்டு, சில வரிகள் மட்டுமே, இப்போது நமது பூசை புத்தகத்தில் இருப்பது போன்று சில வரிகள் மட்டுமே பாடப்பட்டு வருகின்றன. ஆனாலும் அவை தனது முந்தைய வடிவத்தின்படியே இசைக்கப்படுகின்றன.

படிக்கீதம் இரண்டு பாகங்களை உடையது. முதலாவது responsorium என்று அழைக்கப்படும் பதிலுரை யாகவும், மற்றது versus என்ற வாக்கியங்களாகவும் இருக் கின்றன. பொதுவாக அநேக பூசைகளில் இந்த இரண்டு பகுதிகளுக்குமான வரிகள் சங்கீதங்களிலிருந்தே எடுக்கப் பட்டவையாக உள்ளன. பழைய புதியஏற்பாட்டு நூல்களி லிருந்து அநேகமாக எடுக்கப்படுவதில்லை. சில சமயங்களில் வேதாகமம் அல்லாத வாசகங்கள் அல்லது வரிகள் பயன் படுத்தப்படுவதுண்டு. உதாரணமாக, தேவமாதாவின் வியாகுலங்களின் திருநாளன்றைய பூசையின் படிக்கீதம். இது போன்றே அர்ச். கன்னிமரியாயின் அநேக பூசைகளின் படிக்கீதங்கள் திருச்சபையே உருவாக்கி சேர்த்துள்ளது. இப்படியாக திருவழிப்பாடு முழுவதிலும் பரி. சுவிசேஷ வார்த்தைகளானாலும் சரி, காரணகாரியங்களை (பூசை யின்) உணர்த்தும் சரியான பரிசுத்த சிந்தனைகளின் வார்த் தைகளை, வாக்கியங்களை ஆபரணத்தில் ஆங்காங்கே இரத்தின கற்கள் ஒளிவீசும் வகையில் பதிக்கப்படுவது போல தமது தெய்வீக கைங்கரியமான திவ்விய பலிபூசையிலும் திருச்சபை இணைத்துள்ளது.

படிக்கீதத்தின் நோக்கம் - பொருளை நாம் பாடற் குழுவினரின் பாடலிலிருந்து எளிதாக கண்டுணர்ந்து விட லாம். திவ்விய பலிபூசையில் மூன்று வேறுபட்ட கீதங்கள் (Chants) - அதாவது பிரவேசக்கீதம் (Introit), காணிக்கைக் கீதம் (Offertory) மற்றும் நற்கருணைக்கீதம் (Communion) அன்றைய திருப்பலிப்பூசையின் திருநாள் தன்மையைச் சுட்டிக்காட்டுபவையாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் திருவழிபாட்டு முறைமையின் வருடத்தின் கருத்துக் களை கண்டு கொள்ளலாம். பூசையின் கருத்துக்களை பிரதி பலிப்பவையாக இவை தேர்ந்தெடுக்கப்பட்டு சேர்க்கப்பட்டு உள்ளன. பூசை துவக்கத்தில் பிரவேசக்கீதத்தில் உணர்த்தப் பட்ட அதே உணர்வுகளும் உறுதிகளும் மீண்டும் இப்போது இரு வாசகங்களுக்குமிடையே தூண்டியெழுப்பப்பட்டு, தெளிந்து அன்றைய பூசையின் உணர்வில் ஆழ்ந்து தழைத்து மூழ்கவும் நமக்கு இவை உதவுகின்றன. இதனால் படிக் கீதத்திற்கும் இரு வேதாகம வாசகங்களுக்கும் இடையே உள்ள உள்ளார்ந்த தொடர்பு அவற்றின் சேர்க்கை இணைப்பு தெளிவாக உணர்த்தப்படுகின்றன. இந்தப் படிக்கீதங்கள் திருப்பலிப்பூசையின் மைய கருத்துக்கு ஏற்ப கவனமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அதனாலேயே தான் வாசகங் களும் கீதங்களும் ஒன்றுக்கொன்று நெருங்கியவையாக இருக்கின்றன. எனவே இந்த இரண்டிலும் திருச்சபையின் உன்னதமான கைங்கரிய உணர்வு எதிரொலிக்கப்படு கின்றன. அதோடு அவற்றின் தன்மையும் வேறுபட்டதாக இருக்கின்றன. எப்படியெனில் வாசகங்கள் போதிக்கும் தன்மையையும், கீதங்கள் பக்தியுணர்வூட்டும் தன்மை உடையவனவாகவும் இருக்கின்றன. வாசகங்கள் வாசிக்கப் படும்போது சர்வேசுரன் நம்மிடம் இறங்கி வந்து பேசுகிறார். தமது இரகசியங்களை அறியச் செய்கிறார். தமது சித்தத்தை நமக்கு உணர்த்துகிறார். தமது வாசகங்கள் மூலம் நமக்கு போதித்து, கண்டித்து, திருத்தி, சிலவேளைகளில் பய முறுத்தி, தமது வாக்குறுதிகளால் தேற்றி ஆறுதல் தருகிறார். ஆனால் கீதத்தினாலோ (Chant) சர்வேசுரனை நோக்கி எழுப்பப்படுகிறோம். நமது பக்தியுருக்கத்தை நமது புகழ்ச்சி யால், நன்றியறிதலால், அன்பால், வியந்து போற்றுவதால், மன்றாட்டால், மனஸ்தாபத்தால், மகிழ்ச்சியால் என பல்வேறு வழிகளில் வெளிப்படுத்துகிறோம். இவ்வாறாக ஆன்மாவை உருக்கும் பாடல்களோடு, போதிக்கும் வாசகங்களும் இணைந்து தெய்வீக கைங்கரியத்தின் உன்னத பலன்களை நாம் பெற்றுக்கொள்ள நமக்கு இவை உதவு கின்றன.

## படிக்கீதத்தின் பாகங்கள்

பொதுவாக படிக்கீதம் தனியாகப் படிக்கப்படுவ தோ அல்லது வாசிக்கப்படுவதோ இல்லை. அவை தொடர்ச்சி யைக் கொண்டுள்ளது. பூசை நிறைவேற்ற கருத்தின் உணர் வான மகிழ்ச்சியையோ அல்லது துக்க வேதனையையோ வெளிப்படுத்துபவையாக இவை உள்ளன. எப்படியெனில், மகிழ்ச்சியை வெளிப்படுத்த **"அல்லேலூயா கீதம்"** திரு வழிபாட்டு முறைமை ஆண்டு முழுவதிலும் படிக்கீதத்தோடு சேர்த்து பொதுவாக இசைக்கப்படுகிறது. இது முதலில் இரண்டு அல்லேலூயாவையும் அதைத் தொடர்ந்து ஒரு வாசகம் (verse) பின்னர் மற்றொரு அல்லேலூயாவையும் கொண்டதாக உள்ளது. இப்படி இந்த மூன்றையும் சேர்த்து அல்லேலூயாக்கீதம் என்று அழைக்கப்படுகிறது. இவை ஆன்மாவின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, மேலே எழுப்பு பவையாகத் திகழ்கின்றன. இந்த மூன்று அல்லேலூயாக் களுக்கும் இடையே வரும் வாசக வரிகள் அந்த மகிழ்ச்சியின் தொடர்ச்சியாக, அதனை வெளிப்படுத்துவதாகத் திகழ்கிறது. இதுவும்கூட படிக்கீதத்தின் பூசையின் தன்மையிலான உணர்வை சுட்டிக்காட்டுவதாக உள்ளது. ஆகையாலேயே தான் திருச்சபை இந்த வாசக வரிகளை படிக்கீதத்தில் மிக்க கவனமாக தேர்ந்தெடுத்திருக்கிறது. படிக்கீதத்து வாசகங் களை எப்போதும் சங்கீதங்களிலிருந்து எடுக்கும் திருச்சபை யானது அல்லேலூயாக்கீத வாசகத்திற்கு மட்டும் இந்த கண்டிப்பை கொண்டிருப்பதில்லை. வேதாகமத்திலிருந் தோ அல்லது சங்கீதங்களிலிருந்தோ அல்லது அன்றைய நாளின் பலி நிறைவேற்றும் கருத்தை தெளிவாகச் சுட்டிக் காட்டும் வரிகளாகவோ திருச்சபை தேர்ந்தெடுத்து பயன் படுத்துகிறது. சில சமயங்களில் திருச்சபையேகூட இந்த வாசக வரிகளை உருவாக்கிக் கொள்ளும். உதாரணமாக தேவமாதாவின் விண்ணேற்பு திருநாள் பூசையில் வரும் அல்லேலூயாக்கீதம் பின்வருமாறு உள்ளது: "அல்லே லூயா... அல்லே... லூய்யா - கன்னிமரியம்மாள் பரலோகத் திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டாள். சம்மனசுக்களின் சேனை அகமகிழ்கின்றது... அல்லே... லூய்யா".

(தொடரும்)

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

(தேவமாதாவின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)

## (14) மகா வணக்கத்துக்குரிய கன்னிகையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

ஒருவருக்கு பிறர் செலுத்தும் சங்கையும், மரியாதையுமே வணக்கம் என்று அழைக்கப்படுகிறது. சமூகத்திலே உயர்ந்த அந்தஸ்து பதவியை வகிப்பவர்களும், நற்குணம் படைத்தவர்களுமே, பொதுவாக இத்தகைய வணக்கம் பெறுவார்கள். மக்கள் நலம் கருதி உழைக்கும் அரசு அதிகாரிகள் மற்றும் நமது ஆன்ம நலன் கோரி அரும்பாடு படும் திருச்சபை அதிகாரிகளுக்கும் நாம் வணக்கம் செலுத்துகிறோம். நமது உபகாரிகளுக்கு நன்றி கூறி வணக்கம் செலுத்துதல் நமது கடன்.



இந்த வகையிலே பார்க்கும் போது நமது மோட்ச அன்னைக்கு நாம் எவ்வளவோ வணக்கம் செலுத்த வேண்டு மல்லவா? அவர்களது அந்தஸ்து சர்வேசுரனிடம் அவர்கள் கொண்டுள்ள ஐக்கியம், சலுகையால் உயர்ந்தது. அவர்களது மகிமை அவர்களது புண்ணியங்களால் மிளிர்கிறது. அவர்கள் நமக்குச் செய்துவரும் பேருபகாரம் மீட்புத்திட்டத்தில் அவர்களது முழு ஒத்துழைப்பால் துலங்குகிறது. இதனால்தான் தாய் திருச்சபை பரிசுத்த கன்னிமாமரித் தாயை சர்வேசுரனுக்கு அடியில் சகல சம்மனசுக்கள், அர்ச்சியசிஷ்டவர்களுக்கெல்லாம் **மேலான உந்நதமான வணக்கம்** (Hyper-dulia) செலுத்த தமது மக்களாகிய நம்மை பணிக்கிறது.

### தேவ அன்னையின் உயர்வு!

தேவதாயின் உயர்வு, அவர்களது தெய்வீகத் தாய்மையில் துலங்குகிறது! ஆம்! அவர்கள் சர்வ லோகங்களையும், உயிரினங் களையும் படைத்து, போசித்து, பாதுகாத்து வரும் சர்வேசுரனின் தாய்! கடவுளை ஈன்றெடுத்த வர்கள். அவருக்கே மனுஷிகத்தைத் தந்து அமுதூட்டி காத்து இரட்சித்த தாய். என்ன அற்புதமான உயர்வு. ஒரு சிருஷ்டி கடவுளின் தாய். இதுவே மனிதாவ தாரத்தின் பரம இரகசியம்!! அத்தகைய உயர்வு மேன்மை - அந்தஸ்து பெற்று இலங்கிடும் தேவ அன்னை மிக உந்நத வணக்கத்துக்குரியவர்கள் அல்லவா?

### தேவ அன்னை நமது உபகாரி!

மீட்பரை பெற்று - மீட்பையே மனுக்குலத்திற்கு கொண்டுவந்த பெரிய உபகாரியல்லவா நம் தேவ அன்னை. கடவுளின் மீட்புத் திட்டத்திற்கு முழுவதும் கீழ்ப்படிந்து தன்னையே அடிமையாக்கி தன்னையே சேசுவோடு இணைத்து அவரோடு பாடுகளை அனுபவித்து கல்வாரியில் அவரோடு நமது மீட்பை சம்பாதித்து தந்த இணை-மீட்பரான உபகாரியல்லவா நமது தேவ மாதா! விண்ணேற்படைந்து மோட்ச பூலோக அரசியாக முடி சூட்டப்பட்டு நம்மை சேசுவின் பெயரால் பரிபாலித்து வரும் அரசியல்லவா அவர்கள்! இன்னும் நம்மீது இரக்கம் பொழிந்து நேசத்துடன் தமது பல்வேறு காட்சிகள் மூலம் நம்மை மோட்ச பாதைக்கு கொண்டு செல்லும் தாய் அல்லவா அவர்கள்! அத்தகைய பெரிய உபகார அன்னையை நாம் மகா சங்கையோடு வணக்கம் செலுத்துதல் தகுமல்லவா? அதுவே நமது கடமையும் அல்லவா?

தேவமாதாவுக்கு நாம் வணக்கம் செலுத்துவது, பதித மார்க்கத்தாரும், அஞ்ஞானிகளும் நினைப்பது போல அவர்களை ஒரு தேவதையாகக் கருதி ஆராதனை செய்வதில்லை. அவ்வாறு செய்வது தேவ துரோகம். ஏனெனில் ஆராதனை (Latria) என்பது சர்வேசுரனுக்கு மட்டுமே செய்யப்படுவது ஆகும். ஆனால் நமது தேவ அன்னைக்கு நாம் செய்வது **மேலான உந்நதமான வணக்கத்தையே !**

எனவே உள்ளன்போடு நமது தேவ அன்னையின் உயர்வு பெருமைகளையெல்லாம் எண்ணி மகிழ்ந்து அவர்களது உபகாரங்களுக்கு நன்றி பாராட்டி என்றும் அவர்களை:

**"மகா வணக்கத்துக்குரிய கன்னிகையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்"** என்று மன்றாடுவோமாக!

# கத்தோலிக்கக் குடும்பத்தின் மேன்மை

(இக்கட்டுரைத் தொடர் Rev. George A. Kelly எழுதிய "The Catholic Family Hand Book"
என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

## 1. மகிழ்ச்சியான குடும்பம் (தொடர்ச்சி)

### கத்தோலிக்கக் குடும்பங்களுக்கு தேவ வரப்பிரசாதத்தின் அவசியம்!

குடும்பத்தில் பெற்றோர் சர்வேசுரனுடன் உடனுழைப்பாளர்களாக இருக்கிறார்கள். உங்கள் குடும்பத்தின் வெற்றி நீங்கள் பெற்றோர்கள் என்ற முறையில் சர்வேசுரனுடைய மிகப் பெரிய கொடைகளில் - படைத்தல் என்ற உந்நதமான செயலில் பங்கு பெறுகிறீர்கள் என்ற உண்மையை உணர்ந்து அங்கீகரிப்பதில் அடங்கி இருக்கிறது. உங்களது பங்கு, பிள்ளைகளைப் பெற்று அவர்களுக்கு கல்வி பயிற்றுவிப்பதின் மூலம் கடைசியாக அவரிடமே அவர்கள் திரும்பச் செல்வதற்கு உதவுவதில் அடங்கியிருக்கிறது. அவரோடு மட்டுமே உங்கள் ஜீவியத்தின் நோக்கத்தை, உங்கள் துணைவரின் நோக்கத்தை உங்கள் குழந்தைகளின் ஜீவியத்தின் நோக்கத்தை நிறைவேற்ற முடியும். ஏனெனில் நாம் குழந்தைப் பருவத்திலேயே கற்றுக்கொண்டது போல நம்முடைய ஜீவியத்தின் முதல் குறிக்கோள் இவ்வுலகில் சர்வேசுரனை அறிந்து சிநேகித்து சேவித்து அதன் மூலம் மறுவுலகில் அவருடன் என்றும் மகிழ்ச்சியோடு இருப்பதுதான்.

இந்த நோக்கத்தை நிறைவேற்ற, குடும்பமானது சர்வேசுரன், பெற்றோர்கள், குழந்தைகள் என்ற மூன்று கோணங்களைக் கொண்ட முக்கோண வடிவ அமைப்பாக இருக்கவேண்டும். குடும்பத்தின் ஊற்றாகிய திருமணத்தை தேவதிரவிய அநுமானமாக உயர்த்தியதின் மூலம் இதை நமதாண்டவர் போதிக்கின்றார். துன்பங்கள், சோதனைகள் உங்கள் குடும்ப வாழ்வைத் தாக்கினாலும் அதன் மத்தியிலும் இந்த தேவதிரவிய அநுமானத்தின் வழியாக அதன் ஞான வெற்றிக்கு வரப்பிரசாதத்தைத் தருகிறார்.

பெற்று வளர்க்கும் பணியில் உங்கள் பங்காளி - உடனுழைப்பாளர் என்ற வகையில் சர்வேசுரன் உங்களுக்கு உதவுவார். அவருடைய வரப்பிரசாதம் உங்கள் இல்லத்தை அவருடைய உறைவிடமாகவும், உங்களின் அர்ச்சிப்புக்கான வழியுமாகத் திகழும். இவ்வரப்பிரசாதம் உங்களை, பெற்றோர்கள் என்ற முறையில் இன்னும் அதிகமாக நேசிப்பவராக மாற்றும்; நீங்கள் உங்களால் இவ்வளவுதான் முடியும் என்று நினைத்திருந்ததைக்காட்டிலும் அதிகமாக நீங்கள கனவிலும்கூட நினைத்திராத சுயபரித்தியாகத்தை செய்யவைக்கும். இது உங்களின் இரட்சண்யத்திற்கு மட்டுமின்றி, உங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் இரட்சண்யத்திற்கும் உதவியாக இருக்கும்.

கணவன் மனைவியான இவர்களோடுகூட சர்வேசுரன் இருக்கிறார் என்ற உண்மை எதையும்விட பெற்றோர்களிடம் காணப்படும் உள்ளார்ந்த திறமைகள் நமக்கு சாட்சிகளாக இருக்கின்றன. உங்கள் அயலாரைக் கவனித்துப் பார்த்தால் சந்தேகமின்றி, சிறிது காலத்திற்கு முன்பு வரை பொறுப்பற்றவர்களாய், தகுதியற்றவர்களாய், பெற்றோர்கள் என்கிற கடமையைச் செய்யத் திறனற்றவர்களாய் இருந்த ஆண்களும், பெண்களும், இப்போது தாய்மார்களாய், தகப்பன்மார்களாய் தங்களுடைய கடமைகளை செய்து வருகிறார்கள். இதற்கு சர்வேசுரனின் வரப்பிரசாதத்தின் உதவியேயன்றி வேறு என்னக் காரணமாகும்.

பெற்றோர்களே, நீங்கள் கடவுளின் வரப்பிரசாதத்தின் வலிமையை ஏற்றுக்கொண்டால், பெற்றோர்கள் என்ற வகையில் உங்களது திறமைகளை குறைத்து மதிப்பிடமாட்டீர்கள். நம்மில் பல பெற்றோர்கள், உலகக் கணிப்பின்படியாக பார்த்தால் உளவியல் (Psychologhy) பற்றி அறியாதவர்கள்தான். இருப்பினும் பெரும்பான்மையானவர்கள் தங்கள் பிள்ளைகளை நன்கு வளர்த்து ஆளாக்கி நன்மைத்தனத்தின் பாதையில் நடக்கச் செய்கிறார்கள். இந்த வெற்றி ஒரேயொரு காரணத்தினால் நடந்தது; இவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு சிநேகம் தேவை, ஊக்குவிப்பு தேவை, வழிகாட்டுதல் தேவை என்பதை புரிந்துகொண்டு அதை அவர்களுக்கு அளித்தார்கள். குழந்தை வளர்ப்பு நிபுணர்கள் எவருடைய உதவியுமின்றி தாங்களே, இயல்பாகவே தங்கள் பிள்ளைகளுக்கு எது அதிக நன்மை பயக்குமோ அதைச் செய்வித்தார்கள். உங்களுக்குச் சர்வேசுரன் தர சித்தமாயிருக்கிற வரப்பிரசாதங்களை ஏற்றுக்கொள்ள மனதாய் இருப்பீர்களாகில், நீங்களும் அவ்வாறு செய்யமுடியும். இயல்பான முறையில் பிள்ளைகளுக்கு நீங்கள் செய்யும் காரியம், எவ்வித மனித வழிமுறைகளின் வழிகாட்டுதலின்படி செய்வதைவிட அதிக பயன் தரும்.

(தொடரும்)

**சர்வ வல்லபரான சர்வேசுரா, தேவரீருடைய பராமரிப்பினால் உண்டான ஏற்பாடுகளுக்கு உமது தயையின் உதவியை உடனிருக்கச் செய்து, தேவரீர் முறையுள்ள குடும்ப வாழ்க்கையில் இணைந்தவர்களை நீடிய சமாதானத்தில் பாதுகாத்தருள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.**

(திருமண பூசையில் நற்கருணை உட்கொண்டபின் ஜெபம்)

( 10-ம் பக்கம் தொடர்ச்சி )

### திடப்படுத்துதல்

*அர்ச். 10-ம் பத்திநாதரின் பூசையில் நற்கருணை உட்கொண்டபின் செய்யப்படும் ஜெபம்* (Post communion) *பின்வருமாறு உள்ளது.* Ut, interveniente sancto Pio Sumo Pontifice; fortes efficiamur in fide,... - "*எங்களை விசுவாசத்தில் நிலைநிறுத்தும்*" - *என்றும் அதே பூசையில் சபைச் செபத்தில்* (collect)*:* Deus, qui ad tuendam catholicam fidem, et universa in Christo instauranda sanctum Pium Pontificem... "*சர்வேசுரா சுவாமி கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாக்கவும் சகலத்தையும் கிறீஸ்துவில் புதுப்பிக்கவும் அர்ச். 10-ம் பத்திநாதரான உமது பாப்பானவருக்கு தெய்வீக ஞானத்தையும், அப்போஸ்தலிக்க உறுதியையும் கொடுத்தருளினீரே...*" *என்று இருக்கிறது.*

*சர்வேசுரன், இந்தப் பாப்பானவரை முதலில் கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாக்கவும், அதன் மூலம் திருச்சபை தனது விசுவாசத்தில் உறுதியாயிருக்கவும் செய்தருளினார். திருச்சபையின் திடம், பலம் - முழுமையான விசுவாசமே. இதுவே திருச்சபையின் முதல் நலன். அதன் பொக்கிஷம். இதை அர்ச். 10-ம் பத்திநாதர் நன்கு அறிந்திருந்தார். எனவேதான் விசுவாசத்தில் ஊன்றி விசுவாசிகளிடமான உள் ஒற்றுமையைப் பேண சில நடைமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். மிகப் பிரசித்தி பெற்ற* "**Pascendi**" *என்ற சுற்றுமடலை எழுதினார். இதில்* "***நவீனம்***" *என்ற பதிதத்தை வெளிக்கொணர்ந்து அம்பலப் படுத்தினார். பின்பு இத்தப்பறைகளைக் கண்டனம் செய்து* "Lamentabili" *என்ற ஆணை மடலையும் அதனோடுகூட அனைத்து மேற்றிராணிமார்களுக்கும் ஒரு தன்னிச்சையான* (Motu Proprio) *ஆணை மடலையும் எழுதி நவீனர்களைத் தண்டிக்க கட்டளையிட்டார். ஆம்! இவர்களை தண்டித்து அப்படிப்பட்டவர்கள் வகித்துவந்த கல்வி புகட்டும் பணியிலிருந்தும், மேய்ப்பு பணிகளிலிருந்தும் அகற்ற உத்தரவிட்டார். இவரது கட்டளையை ஏற்று அநேக நவீன இறையியலாளர்கள் ஒடுக்கப்பட்டனர்.*

*இப்பணியை மேற்கொண்டதற்காக இவரை சிலர் எதிர்த்தார்கள். இவர் கீழ்த்தரமாக நடப்பதாக குற்றம் சாட்டினார்கள். ஆனால், அன்பார்ந்த விசுவாசிகளே! இவர் ஒருபோதும் கீழ்த்தரமாக நடக்கவில்லை. மாறாக, நீதிமானாக நடந்தார். சத்தியத்தையும், நீதியையும் நிலை நிறுத்தினார். மேலும் இதை மிகப் பக்குவமாகவும் நன்மை தனத்தோடும் செய்தார். நவீனர்களை "திருச்சபை விலக்கம்" செய்தபோது - ஆம். இப்படி அநேக நவீனர்களுக்கு செய்தார் - தனது சார்பில் ஒரு குருவானவரை விசேஷ விதமாக அந்த நவீனரிடம் அனுப்பி தனது தகப்பனுக்குரிய பாசத்தையும் நவீனரின் மனந்திரும்புதலுக்கு அவர் தான் எவ்வளவு ஏக்கத்தோடு காத்திருக்கிறார் என்பதையும் தெரிவித்தார். எப்படிப்பட்ட மேன்மையான மனது! பதிதத் தின் பேரில் கடுமையும், உறுதியும் - பதிதர்களின் பேரிலோ நன்மைத்தனமும் கனிவும்!*

*இப்பொழுது* "**Pascendi**" *என்ற சுற்றுமடலின் சாராம்சத்தை உங்களுக்கு தருகிறேன்:*

*(தொடரும்)*

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

**விசுவாச மந்திரம்** (தொடர்ச்சி)

| மந்திரம் | கருத்து |
|---|---|
| 1. சர்வத்துக்கும் வல்ல | 1. அளவில்லாத வல்லமையுள்ளவருமான சர்வேசுரன் உண்டென்றும், அவர் தேவசுபாவத்தில் ஒருவரும், ஆள்வகையில் மூவருமாயிருக்கிறாரென்றும், |
| பிதாவாகிய சர்வேசுரனை | முதல் ஆளுக்குத் தகப்பன், இரண்டாம் ஆளுக்கு மகன், மூன்றாம் ஆளுக்கு இஸ்பிரீத்துசாந்து என்கிற பெயர் உண்டென்றும், |
| அதியோக்கிய பக்தியாக விசுவசிக்கிறேன். | மிகுந்த வணக்க ஆசாரத்தோடு உறுதியாக ஒத்துக் கொள்ளுகிறேன். |

**அர்த்தம்:**

| | | | |
|---|---|---|---|
| சர்வம் | = எல்லாம்; | அதி | = அதிகம், மிகவும்; |
| வல்ல | = வல்லமையுள்ள (சகலத்தையும் செய்ய வல்லப முள்ளவர் - சர்வேசுரனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை). | யோக்கியம் | = ஆசாரம், சங்கை, வணக்கம். |
| | | விசுவசிக்கிறது | = தெரியாத காரியத்தை மற்றொருவர் சொன்னதினாலே மெய்யென்று ஒத்துக்கொள்ளுகிறது. |

| | |
|---|---|
| 2. அவருடைய ஏக சுதனாகிய நம்முடைய நாதர் சேசுக் கிறீஸ்துவையும் அதியோக்கிய பக்தியாக விசுவசிக்கிறேன். | 2. பிதாவாகிய சர்வேசுரனுக்கு ஒரே குமாரன் உண்டென்றும், அவர் திரித்துவத்தின் இரண்டாம் ஆளென்றும், அவரே நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் சுவாமி என்றும், மிகுந்த வணக்கத்தோடு ஒத்துக்கொள்ளுகிறேன். **(தொடரும்)** |

# செய்திகள்

## ★ மெய்ப்பிக்கப்பட்ட வதந்தி !

“இத்தாலி நாட்டில் கம்யூனிசம் பதிதத்தை தோற்றுவித்த **Antonio Gramsie** 1946–ல் மரணப் படுக்கையில் கத்தோலிக்கத் திருச்சபைக்கு மனந்திரும்பினார்”. வெறும் வதந்தியாகச் சொல்லப்பட்ட இச்செய்தியை வத்திக்கான் அப்போஸ்தலிக்க **Penitentiary** என்று அழைக்கப்படும் பாவசங்கீர்த்தன பலன்கள் மற்றும் பாவப்பொறுத்தல் சம்பந்தமான சங்கத்தின் முன்னாள் தலைவர் அதிமேற்றிராணியார் **Luigi de Magistris** ஆண்டகை உறுதிபடுத்தியுள்ளார்.

## ★ நியமனம் !

**Toledo** மேற்றிராசன மேற்றிராணியார் மிக. வந். **Cardinal Canizares Lolvera** ஆண்டகை வத்திக்கான் தேவ வழிபாடு மற்றும் தேவதிரவிய அநுமானங்கள் சம்பந்தமான சங்கத்தின் தலைவராக பாப்பானவரால் நியமிக்கப்படுகிறார். இவர் முன்பு கர்தினால் ராட்சிங்கருடன் விசுவாச சத்திய சம்பந்தமான சங்கத்தில் உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கர்தினால் **Arize** க்கு அடுத்தபடியாக இப்பதவியை ஏற்கிறார்.

## ★ கர்தினால் ஆண்டகையின் சாட்சியம் !

“ஆடுகளும் மேய்ப்பனும்” என்ற சமீபத்தில் தான் எழுதிய புத்தகத்தை பற்றிய அறிமுக விழாவில் போலோஞ்னா மேற்றிராசன ஆயர் **Retd. Cardinal Giacomo Biffi** ஆண்டகை “கிறீஸ்தவ போதனை காலத்திற்கேற்ப மாறக்கூடியவை அல்ல !” என்று கருத்து தெரிவித்துள்ளார்.

## ★ மகிழ்ச்சியான செய்தி !

தமிழ்நாட்டிலுள்ள மேற்றிராசனங்கள் மற்றும் துறவற சபைகளில் உள்ள குருக்களில் 12% பாரம்பரிய இலத்தீன் திவ்விய பலிபூசையை அறிந்துகொள்வதற்கு அல்லது செய்வதற்கு தயாராக இருப்பதாக சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

## ★ புதிய இந்திய குரு !

ஆஸ்திரேலியாவில் உள்ள நமது திருச்சிலுவை குருமடத்தில் குருத்தவ பயிற்சி பெற்றுவரும் இந்தியாவின் தியாக்கோன் கிரகோரி நொரேனா அவர்கள் வருகிற டிசம்பர் 27–ம் நாளன்று நமதாண்டவரின் நித்திய குருத்துவத்திற்கு அபிஷேகம் செய்யப்படவிருக்கிறார். இவருக்கு நமது ஜெபங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

### தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்கள்:

**பாளையங்கோட்டை:**
அர்ச். தமத்திரித்துவ ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**சிங்கம்பாறை:**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201..

**கிறீஸ்துராஜபுரம்:**
கிறீஸ்துராஜா ஆலயம்,
தொலைபேசி எண்: 04651 - 294785

**நாகர்கோவில்:**
அர்ச். தோமையார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**தூத்துக்குடி:**
அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 9942707246.

**ஆசாரிப்பள்ளம்:**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2586201.

**திருச்சி :**
அர்ச். சூசையப்பர் சிற்றாலயம்
No-14/2, 3-வது மெயின் ரோடு
ஸ்ரீனிவாசா நகர், திருச்சி - 620 017.
தொலைபேசி எண்: 0431 - 2782798.

**சென்னை:**
அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிவளாகம்.
தொலைபேசி எண்: 9941353483; 9445122353; 9444685103.
**ஞாயிறு பூசை நேரம் : மாலை 6.00 மணி**

**ஆர். என். கண்டிகை:**
ஜென்ம இராக்கினி ஆலயம்.
தொலைபேசி எண்: 9444122316.


Society of St. Pius X

#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
Ph: 0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com (or) rajakumar@sspx.com